
1915

அஷ்டலக்ஷ்மி

# மாணவர் அறிவுக் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்

# அறிவுக் கதைகள்


Class No:

Acc No


செ. முரளிதரன்


LENDING
ARASADY PUBLIC LIBRARY



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

41, கண்டிவீதி, கைதடி

தொ.பே. : 021-2231769

322, செட்டியார் தெரு,

கொழும்பு - 11

தொ.பே. : 011- 2334004

Email:australuxme@yahoo.com

Web:www.astraluxume.com



GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.
NOT FOR SALE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் தரவு


| | | |
|---|---|---|
| தலைப்பு | – | மாணவர் அறிவுக் கதைகள் |
| பதிப்பாசிரியர் | – | செ. முரளிதரன் |
| திருத்திய நான்காம் பதிப்பு | – | 06.07.2017 |
| அச்சுப்பதிப்பு | – | அஷ்டலக்ஷ்மி பிரிண்டர்ஸ்,<br>கைதடி. |
| வெளியீடு | – | அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,<br>கொழும்பு – 11 |
| பக்கம் | – | 128 |
| விலை | – | |


GIFT OF THE ASIA FOUNDATION SAN FRANCISCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சிறுவர் சிறுமியருக்கு சிறிய, கவர்ச்சிகரமான, இலகு தமிழில் எழுதப்பட்ட கதைகள் வேண்டும். அவைகளைப் படிப்பதன் மூலம் அவர்கள் மனதுக்கு உற்சாகம் கிடைப்பதோடு பல்வேறு விஷயங்களைப் பற்றிய அவர்களது அறிவு வளரவேண்டும். வாழ்க்கையை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள ஒரு தூண்டுதல் கிடைக்க வேண்டும். இந்த எண்ணத்தோடுதான் இந்தக் கதைகளின் அமைப்பும் வெளியீடும் நடைபெறுகின்றது. இந்த புத்தகத்தில் 34 கதைகள் உள்ளன. இதனால் சிறுவர்களுக்கு இலாபம் கிடைக்குமேயானால் இத்தகைய கதைப் புத்தகங்களை இன்னும் வெளியிடமுடியும்.

**செ. முரளிதரன்**
பதிப்பாசிரியர்

**உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.**

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ආසියා පදනමේ තිළිණයකි
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | විකිණීම සඳහා නොවේ | விற்பனைக்கல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நல்ல மனிதன் | 07. |
| 2. | உண்மையான விறகு வெட்டி | 11. |
| 3. | பேராசை கொண்ட அரசன் | 16. |
| 4. | யோசிக்காமல் வேலை செய்யாதே | 21. |
| 5. | கருணையின் பலன் | 24. |
| 6. | தந்தையும், மகனும் | 27. |
| 7. | பகவான் எங்குமிருக்கிறார் | 30. |
| 8. | நண்பனின் அறிவுரை | 33. |
| 9. | சுவர்க்கத்தின் தரிசனம் | 37. |
| 10. | அனைவரிலும் பெரிய புண்ணியாத்மா | 44. |
| 11. | ஈக்களின் பேராசை | 49. |
| 12. | ஒற்றுமையின் வலிமை | 52. |
| 13. | மருத்துவர் விரட்டப்பட்டார் | 55. |
| 14. | இரு குதிரைகள் | 58. |
| 15. | பிரம்மாவின் பைகள் | 61. |
| 16. | உண்மையான வெற்றி | 64. |
| 17. | முட்டாள் அரசன் | 69. |
| 18. | போ! போ!! வா! வா!! | 72. |
| 19. | முயல்களும், தவளையும் | 76. |
| 20. | மன்னரும் தோட்டக்காரனும் | 79. |
| 21. | உதவிக்குக் கைம்மாறு | 82. |
| 22. | விருந்தோம்பும் பண்பு | 85. |
| 23. | குடியானவனும் நாரையும் | 89. |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24. | கொக்கு கூறிய நீதி | 92. |
| 25. | நன்றிக்கடன் | 96. |
| 26. | பேராசை பிடித்த குரங்கு | 99. |
| 27. | பேராசை பிடித்த நாய் | 102. |
| 28. | பூனைகளும் குரங்கும் | 104. |
| 29. | சண்டை சிங்கத்துக்கும், சிறுத்தைக்கும் : லாபம் நரிக்கு | 107. |
| 30. | ஆமையும் முயலும் | 110. |
| 31. | நாயின் தவறு | 114. |
| 32. | உண்மையான மான்கள் | 116. |
| 33. | தன் கையே தனக்குதவி | 121. |
| 34. | தற்பெருமையின் பயன் | 125. |


GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ආසියා පදනමෙන් තිළිණයකි
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | විකිණීමට නොවේ | விற்பனைக்கல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நல்ல மனிதன்

பணக்காரரர் ஒருவர் கோவில் ஒன்று கட்டினார். கடவுளைப் பூசிக்க அர்ச்சகர் ஒருவரை நியமித்தார். கோவிலின் தேவைகளுக்காக அநேக பூமி, வயல், தோட்டங்களைக் கோவிலின் பெயருக்கு எழுதி வைத்தார். கோவிலுக்கு வரும் ஏழை எளியவர்கள், சாதி சனங்கள் இரண்டு, மூன்று தினங்கள் தங்கினாலும் அவர்களனைவருக்கும் கடவுளின் பிரசாதம் கிடைக்கும்படி செய்தார். கோவிலின் சொத்துக்களையும், மற்ற வேலைகளையும் சரிவர நடத்திச் செல்ல அவருக்குத் தகுதிவாய்ந்த ஒரு மனிதர் தேவைப்பட்டார்.

பல மனிதர்கள் பணக்காரரிடம் வந்தார்கள். கோவிலில் வேலை கிடைத்தால் நல்ல சம்பளம் கிடைக்குமென அவர்கள் நினைத்தார்கள். ஆனால் பணக்காரர் ''எனக்கு ஒரு நல்ல மனிதன் வேண்டும். அவனை நானே தேர்ந்து எடுத்துக் கொள்வேன்'' என அனைவரையும் திருப்பி அனுப்பிவிட்டார்.

அவர்கள் மனதிற்குள்ளேயே பணக்காரரைத் திட்டிக் கொண்டார்கள். பலர் அவரை முட்டாள், பைத்தியம் எனச் சொன்னார்கள். ஆனால் பணக்காரர் யார் பேச்சையும் அலட்சியம் செய்யவில்லை. கோவில் கதவு திறந்து கடவுளின் தரிசனத்திற்காக சனங்கள் வரத் தொடங்கியவுடன், பணக்காரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வீட்டு மாடியில் அமர்ந்து மௌனமாக அந்த சனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஒரு மனிதன் கோவிலுக்குப் பகவானின் தரிசனத்துக்காக வந்தான். அவனது ஆடைகள் கிழிந்தும், அழுக்கடைந்துமிருந்தான். அவன் அதிகம் படித்தவனாகவும் தோன்றவில்லை. கடவுளைத் தரிசித்துவிட்டு அவன் திரும்பும் சமயம் பணக்காரர் அவனைத் தன்னிடம் கூப்பிட்டு ''நீங்கள் இக்கோயிலைப் பராமரிக்கும் வேலையை ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டார்.

அந்த மனிதனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவன் ''நான் அதிகம் படித்தவனல்ல. இவ்வளவு பெரிய கோவிலை எப்படி நிர்வகிப்பேன்?'' என்றார்.

பணக்காரர் ''எனக்கு அதிகம் படித்த மனிதன் தேவையில்லை. ஒரு நல்ல மனிதனைத் தான் மேற்பார்வையாளராக நியமிக்க விரும்புகிறேன்'' என்றார்.

அம்மனிதன் சொன்னார் - ''இவ்வளவு மனிதர்களில் என்னை மட்டும் எப்படி நல்லவன் என்று மதிப்பிட்டீர்கள்?'' என்று கேட்டான்.

பணக்காரர் ''நீங்கள் நல்லவரென்று எனக்குத் தெரியும். கோவிலின் வழியில் ஒரு செங்கல் துண்டு புதைந்து அதன் நுனிபட்டு விழுந்தும், தடுமாறியும் சென்று கொண்டிருந்தனர். நீங்கள் அந்த முனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிபடாவிட்டாலும், அதைப்பார்த்ததும் அதைப் பிடுங்கியெறிய முயற்சித்தீர்கள். என்னுடைய வேலைக்காரனிடமிருந்து மண்வெட்டி கேட்டு வாங்கி அக்கல்லை அகற்றிவிட்டு பூமியைச் சமப்படுத்தியதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்'' என்றார்.

அந்த மனிதன் ''இது பெரிய விஷயமில்லை. வழியிலுள்ள முள், செங்கல், தடுக்கி விழும்படியான கல் இவைகளை எடுத்தெறிந்து சமப்படுத்துதல் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய கடமை'' என்று சொன்னான்.

பணக்காரர் தன்னுடைய கடமையை அறிந்தவனும், அதைக் கடைப்பிடிப்பவனும் தான் நல்ல மனிதனாகிறான் என்று அவனைக் கோவில் அதிகாரியாக்கினார்.

அந்த மனிதன் கோவிலின் அதிகாரியாகி, நல்ல முறையில் கோவிலை நிர்வாகம் செய்தான்.

**எப்போதும் நல்லதையே நினைத்து**
**நல்லதையே செய் எல்லாம்**
**நன்மையாய் முடியும்.**

* * * *

GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ආසියා පදනමේ තිළිණයකි
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | විකිණීම සඳහා නොවේ | விற்பனைக்கல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NOOLAHAM FOUNDATION
THE ASIA FOUNDATION U.S.A.
SAN FRANCISCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. உண்மையான விறகு வெட்டி

முருகன் கள்ளங்கபடமற்ற நேர்மையாளன். அவன் மிகவும் ஏழை. நாள் முழுவதும் காட்டில் உலர்ந்த விறகை வெட்டி மாலையில் அதைக் கட்டாகக் கட்டிக் கடைத்தெருவிற்குச் செல்வான். விறகு விற்ற பணத்தில் அரிசி, உப்பு முதலியன வாங்கித் திரும்பி வருவான். அவன் உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கிடைக்கவில்லையே என்று எண்ணாமல் மகிழ்ச்சியாகவே இருந்தான். ஒரு நாள் முருகன் விறகு வெட்டக் காட்டிற்குச் சென்றான். ஒரு நதிக்கரையில் உள்ள மரத்தின் உலர்ந்த கிளையை வெட்டும் போது அவனுடைய கோடரி பிடியிலிருந்து நழுவி நதியில் விழுந்து விட்டது. முருகன் மரத்திலிருந்து இறங்கி நதியில் பலமுறை மூழ்கித் தேடியும் அவனுடைய கோடரி கிடைக்கவில்லை. முருகன் கவலையுடன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு நதிக்கரையில் உட்கார்ந்துவிட்டான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வரத் தொடங்கியது. அவனிடத்தில் இன்னொரு கோடரி வாங்கக் காசு இல்லை. கோடரி இல்லாமல் தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றுவது எப்படி? என்று அவன் மிகவும் வருந்தினான். இவற்றைப் பார்த்துக்கொண்டு இருந்த வனதேவதைக்கு முருகனிடம் இரக்கம் ஏற்பட்டது. அது மனித உருவத்தில் அவன் முன் தோன்றி, ''ஏன் அழுகின்றாய்?'' என்று கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முருகன், ''என் கோடரி நதியில் விழுந்துவிட்டது. நான் எப்படி விறகு வெட்டி என் குழந்தைகளுக்கு உணவளிப்பேன்?'' என்று கூறினான்.

தேவதை ''நீ அழாதே நான் உன்னுடைய கோடரியை எடுத்துத் தருகின்றேன்'' என்றது.

தேவதை நீரில் மூழ்கி ஒரு தங்கக் கோடரியுடன் வெளியே வந்து, ''நீ உன்னுடைய கோடரியை எடுத்துக்கொள்'' என்றது.

முருகன் தலைநிமிர்ந்து பார்த்து, ''இது பெரிய மனிதனின் கோடரி. இதுவோ தங்கக் கோடரி. நான் ஏழை தங்கக் கோடரி செய்ய என்னிடம் ஏது தங்கம்?'' என்றான். தேவதை இரண்டாம் தடவை மறுபடியும் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்து முருகனுக்குக்கொடுக்க வந்தது.

முருகன் ''நான் அதிஷ்டமற்றவன். எனக்காக நீங்கள் அதிக கஷ்டப்பட்டுக் கூட என் கோடரி கிடைக்கவில்லை. என் கோடரி சாதாரண இரும்புக் கோடரி'' என்று சொன்னான்.

மூன்றாவது தடவை தேவதை நீரில் மூழ்கி முருகனுடைய இரும்புக் கோடரியை எடுத்துக் கொடுத்தது. முருகன் சந்தோஷப்பட்டான். அவன் நன்றி செலுத்தித் தன்னுடைய கோடரியை பெற்றுக்கொண்டான். தேவதை முருகனின் உண்மை உணர்வையும், நாணயத்தையும் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷப்பட்டு ‘‘உன்னுடைய செயலால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நீயே இந்த இரண்டு கோடரிகளையும் எடுத்து போ’’ என்றது.

தங்கம் வெள்ளிக் கோடரிகளைப் பெற்ற முருகன் பணக்காரனாகி விட்டான். அவன் இப்போது விறகு வெட்டச் செல்வதில்லை. அவனுடைய அண்டைவீட்டுக்காரனான சின்னப்பன் முருகனிடம் ‘‘நீ ஏன் இப்போதெல்லாம் விறகு வெட்டச் செல்வதில்லை?’’ என்று கேட்டான். கள்ளங் கபடமற்ற முருகன் எல்லா விஷயங்களையும் சொன்னான். பேராசைக்காரனான சின்னப்பன் வெள்ளி, தங்கக் கோடரிகளின் பேராசையால் மறுநாள் தன் கோடரியை எடுத்துக்கொண்டு அதே காட்டிற்குச் சென்றான். அதே மரத்தில் விறகு வெட்டத்தொடங்கினான். அவன் வேண்டுமென்றே அக்கோடரியைத் தானாக நதியில் போட்டு விட்டு மரத்திலிருந்து இறங்கி, நதிக்கரையில் அமர்ந்து அழத் தொடங்கினான்.

வனதேவதை சின்னப்பனின் பேராசைக்குத் தண்டனை தர வந்தது. சின்னப்பனிடம் கேட்டு விட்டு நதியில் மூழ்கித் தங்கக்கோடரியுடன் வெளியே வந்தது. தங்கக் கோடரியைப் பார்த்ததுமே சின்னப்பன் ‘‘இது என்னுடையது’’ என்று கூச்சலிட்டான்.

வனதேவதை சொன்னது, ‘‘நீ பொய் சொல்கிறாய். இது உன்னுடைய கோடரி அல்ல’’ என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோடரியைத் தண்ணீரில் எறிந்துவிட்டு மறைந்தது. பேராசையால் தன்னுடைய கோடரியையும் இழந்து, அழுதுகொண்டே வருத்தத்துடன் சின்னப்பன் வீடு திரும்பினான். பேராசை பெரு நட்டம் என்பது இக்கதையில் இருந்து விளங்குகின்றது.

**உண்மை உயர்வளிக்கும்**
**பேராசை பெருநட்டம்**

*** *** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING
ARASADY PUBLIC LIBRARY




Class No:
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. பேராசை கொண்ட அரசன்

ஐரோப்பாவின் யூனான் எனும் ஒரு நாடு உள்ளது. பழங்காலத்தில் யூனானின் மீதாஸ் எனும் அரசன் ஆண்டு வந்தான். மீதாஸ் அரசன் மிகவும் பேராசைக்காரன். அவனுக்குத் தன் அன்பு மகளைத் தவிர வேறு ஏதேனும் ஒரு பொருளின் மேல் ஆசை இருக்குமானால் அது தங்கம் தான். இரவு உறங்கும் போது கூட அவன் தங்கத்தைச் சேமிப்பது போன்ற கனவுகளையே கண்டு கொண்டிருந்தான்.

ஒரு நாள் மீதாஸ் மன்னன் தன் பொக்கிஷ அறையிலமர்ந்து தங்கக் கட்டிகளையும், தங்க நாணயங்களையும் எண்ணிக் கொண்டிருந்தான். திடீரென்று அங்கு ஒரு தேவதூதன் வந்தான். அவன் மீதாஸைப் பார்த்து, ''மீதாஸ்! நீ பெரிய பணக்காரன்'' என்று சொன்னான். மீதாஸ் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு ''என்னிடம் மிகக் குறைந்த அளவே தங்கம் உள்ளது. நான் எப்படிப் பணக்காரன் ஆவேன்?'' என்று பதிலளித்தான்.

தேவதூதன் சொன்னான், ''உனக்கு இவ்வளவு தங்கமிருந்தும் சந்தோஷமில்லையா? உனக்கு இன்னும் எவ்வளவு தங்கம் வேண்டும்?'' என்று கேட்டான். ராஜா ''நான் எந்தப்பொருளைக் கையால் தொட்டாலும், அது தங்கமாக மாறிவிட வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதூதன் சிரித்துவிட்டு, ‘‘நல்லது நாளைக் காலையிலிருந்து நீ எந்தப்பொருளைத் தொட்டாலும் அது தங்கமாகும்’’ என்று சொன்னான்.

அன்றிரவு மீதாஸுக்குத் தூக்கமே வரவில்லை. அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். அவன் ஒரு நாற்காலியைத் தொட்டான். அது தங்கமாகிவிட்டது. மேசையைத் தொட்டான்; அதுவும் தங்கமாக மாறியது. மீதாஸ் சந்தோஷ மிகுதியில் குதிக்கவும். நாட்டியமாடவும் தொடங்கினான். அவன் பைத்தி யத்தைப் போல ஓடி தன்னுடைய நந்த வனத்திற்குப் போனான். மரங்களைத் தொட்டான். எல்லாம் தங்க மாகிவிட்டன. எல்லாம் பளபளவென்று பிரகாசிக்கத் தொடங்கின. மீதாஸிடமிருந்த தங்கத்திற்கு அளவே இல்லாமல் ஆகிவிட்டது.

அலைந்து திரிந்ததில் மீதாஸ் களைத்து விட்டான். அவனது கைபட்டு அவனுடைய துணிகள் கூட தங்கமாக மாறி மிகவும் கனமாக ஆகிவிட்டதை அவன் அறியவில்லை. அவனுக்கு தாகமும், பசியும் உண்டாயிற்று. நந்தவனத்திலிருந்து தன்னுடைய அரண்மனைக்கு வந்து ஒரு தங்க நாற்காலியில் உட்கார்ந்தான். ஒரு வேலைக்காரன் அவன் முன்னால் உணவும், நீரும் கொண்டு வந்து வைத்தான். ஆனால் மீதாஸ் முன்போல் உணவருந்துவதற்குத் தட்டில் கை வைத்தவுடன் எல்லாச் சாப்பாடும் தங்கமாகிவிட்டது. நீரருந்துவதற்கு கோப்பையைத் தொட்டதும் கோப்பை, ரொட்டிகள், தங்கச்சோறு, தங்க உருளைக் கிழங்குகள் வைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பசியோடும் தாகத்தோடும் இருந்தான். தங்கத்தை உண்டு பசி தீர முடியுமா?

மீதாஸ் அழத் தொடங்கினான். அதே சமயம் அவனது மகள் விளையாடிக்கொண்டே அங்கு வந்தாள். தன் தந்தை அழுவதைப் பார்த்து அவன் மடியில் ஏறி அவனுடைய கண்ணீரைத் துடைக்கத் தொடங்கினாள். மீதாஸ் தன் பெண்ணை மார்புடன் தழுவிக் கொண்டான். ஆனால் அவன் பெண் அங்கே எங்கிருந்தாள்? மீதாஸின் மடியில் மடிதாங்க முடியாத கனத்தில் தங்க உருவமாக இருந்தாள். உதவியற்ற மீதாஸ் தலையிலடித்துக் கொண்டு அழத் தொடங்கினான்.

தேவதூதனுக்கு இரக்கம் வந்தது. அவன் மறுபடியும் தோன்றினான். அவனைப் பார்த்ததும் மீதாஸ் அவன் கால்களில் விழுந்து, நடுங்கி கொண்டு துதிக்கத் தொடங்கினான். ''நீங்கள் உங்கள் வரத்தைத் திரும்ப பெற்றுக்கொள்ளுங்கள்.''

தேவதூதன் கேட்டான் ''மீதாஸ், உனக்கு இப்போது தங்கம் வேண்டாமா? ஒரு கோப்பை தண்ணீர் விலையுயர்ந்ததா அல்லது தங்கமா? ஒரு ரொட்டித்துண்டு சிறந்ததா, தங்கமா?''

மீதாஸ் கைகூப்பிக்கொண்டு சொன்னான், ''எனக்கு தங்கம் வேண்டாம். மனிதனுக்குத் தங்கம் தேவையற்றதென்று நான் அறிந்து கொண்டேன். தங்கமில்லாமல் மனிதனுக்கு எந்த வேலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைப்படாது. ஆனால் ஒரு குவளை நீரும், ஒரு கவளம் சோறுமின்றி எந்த வேலையும் மனிதனுக்கு நடக்காது. இனி தங்கத்திற்காகப் பேராசைப்பட மாட்டேன்.''

தேவதூதன் அவனுக்கு ஒரு கிண்ணத்தில் நீரைக் கொடுத்து, ''இதை எல்லாவற்றிலும் தெளித்துவிடு'' என்று சொன்னான்.

மீதாஸ் அந்த நீரைத் தன் மகள், மேஜை, நாற்காலி, உணவு, தண்ணீர் மற்றும் பூந்தோட்டத்திலுள்ள மரங்கள் எல்லாவற்றிலும் தெளித்தான். எல்லாப்பொருட்களும் முன்பிருந்தது போலவே மாறிவிட்டன.

**போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து**

⁂ ⁂ ⁂ ⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. யோசிக்காமல் வேலை செய்யாதே

ஒரு குடியானவன் ஒரு கீரி வளர்த்து வந்தான். அக்கீரி மிகவும் கெட்டிக்காரத்தனமும், எஜமானிடம் விசுவாசமும் கொண்டது. ஒரு நாள் குடியானவனின் மனைவி எங்கேயோ சென்றிருந்தாள். குடியானவனின் மனைவி தன் கைக்குழந்தைக்குப் பால் புகட்டிவிட்டு தூங்கச் செய்து, கீரியை அங்கே விட்டு விட்டு, தண்ணீர் எடுத்துவரக் கிணற்றடிக்குக் குடத்துடன் சென்றாள்.

குடியானவனின் மனைவி சென்ற பின்பு ஒரு பொந்திலிருந்து ஒரு கருநாகம் அங்கே வந்தது. தரையில் விரித்திருந்த துணியில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. பாம்பு குழந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த கீரி பாம்பின் மேல் தாவிற்று.

கீரி பாம்பைக் கடித்துத் துண்டு துண்டாக்கிவிட்டு, குடியானவனின் மனைவியின் வருகையை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தது.

குடியானவனின் மனைவி குடத்தில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு திரும்பினாள். அவள், வீட்டின் வெளியே கதவருகில் நின்று கொண்டிருந்த கீரியைப் பார்த்தாள். அவள் தன் குழந்தையை இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்துவிட்டதென்று நினைத்தாள். துக்கத்தாலும், கோபத்தாலும் நீர் நிரம்பிய குடத்தைக் கீரியின் மேல் போட்டாள். அப்பாவியான கீரி துடிதுடித்து இறந்துவிட்டது.


அந்தப்பெண் வீட்டிற்குள் ஓடினாள். அங்கே குழந்தை சுகமாய் தூங்கிக் கொண்டிருப்பதையும், ஒரு கருநாகம் கொல்லப்பட்டிருப்பதையும் அவள் பார்த்தாள். அப்பொழுது தான் அவளுக்குத் தன் தவறு தெரிந்தது. ஓடிவந்து மடியில் இறந்த கீரியை வைத்து கொண்டு அழத்தொடங்கினாள். ஆனால் அவளுடைய அழுகையால் இப்போது என்ன பயன்? அதனால் தான் கூறப்படுகின்றது. ''யோசிக்காமல் செய்துவிட்டு நோவதில் பலன் ஏது? காரியம் கெட்டால் உலகம் சிரிக்கும்'' என்று கூறப்படுகிறது.

**எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | விற்பனைக்கல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. கருணையின் பலன்

சுபுக்தகீன் என்னும் மன்னன் முதலில் ஏழையாக இருந்தான். அப்போது அவன் சாதாரண சிப்பாயாக இருந்தான். ஒரு நாள் அவன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அன்று அவனுக்கு வெகுதூரம் அலைந்து, திரிய நேரிட்டது. வெகுதூரம் சென்றபின் ஒரு பெண் மானையும், அதன் குட்டியையும் பார்த்தான். அவன் அதன் பின்னால் குதிரையைச் செலுத்தினான்.

பெண் மான் பயத்தால் ஒரு புதரில் ஒளிந்து கொண்டது. ஆனால் அதன் குட்டி பின்னால் தங்கிவிட்டது. சுபுக்தகீன் குட்டியின் காலைக்கட்டி, குதிரையின் மேல் வைத்தான் அவன் மிகவும் தேடி அலைந்து பெண் மான் கிடைக்காததால், அந்தக் குட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு திரும்ப நேரிட்டது.

தன் குட்டியை வேட்டைக்காரன் கட்டி எடுத்துச் செல்வதைப் பெண் மான் பார்த்தது. குழந்தைப் பாசத்தால் புதரிலிருந்து வெளியே வந்து சுபுக்தகீனுடைய குதிரையின் பின்னால் ஓடத் தொடங்கியது. வெகுதூரம் சென்ற பிறகு சுபுக்தகீன் பின்னால் திரும்பிப் பார்த்தான். தன் பின்னால் பெண் மான் ஓடி வருவதைக் கண்டு அவனுக்கு வியப்பும், கருணையும் வந்தது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடைய குட்டியின் காற்கட்டை அவிழ்த்துக் குதிரையிலிருந்து இறக்கிவிட்டான். பெண் மான் மகிழ்ந்து தன் குட்டியுடன் வனத்தினுள் ஓடிச் சென்றுவிட்டது.


வீடு திரும்பிய சுபுக்தகீன் இரவில் உறங்கும் போது ஒரு கனவு கண்டான். அதில் யாரோ ஒரு தேவதூதன் சொல்கிறான், ''சுபுக்தகீன்! நீ இன்று ஓர் எளிய பெண் மானிடத்தில் கருணை காட்டியதால் இறைவன் சந்தோஷமடைந்து உன்பெயரை மன்னர்களின் பட்டியலில் எழுதியிருக்கிறார். நீ ஒரு நாள் மன்னன் ஆவாய்!''

சுபுக்தகீனுடைய கனவு உண்மையானது. பின்னாட்களில் அவன் மன்னனானான். ஒரு பெண் மானிடம் இரக்கம் கொண்டதற்கு அவனுக்கு இந்த வெகுமதி கிடைத்தது. யார் உயிரினங்களுக்கு இரக்கம் காட்டுகிறார்களோ, அவர்களுக்கு கடவுள் கட்டாயம் கருணை காட்டுவார்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. தந்தையும் மகனும்

ஓர் இளவயதுத் தந்தை. தன் இளைய மகனை மடியிலமர்த்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எங்கிருந்தோ ஒரு காக்கை பறந்து வந்து வீட்டுக் கூரையின் மீது எதிரே உட்கார்ந்தது. பையன் தந்தையிடம் ''இது என்ன?'' என்று கேட்டான்.

தந்தை ''காக்கை'' என்றார். மறுபடியும் பையன், ''இது என்ன?'' என்று கேட்டான். மறுபடியும் தந்தை, ''இது காக்கை'' என்றார். பையன் மேலும் மேலும் ''என்ன, என்ன'' என்று கேட்டுக் கொண்டிருந்தான். தந்தையும் பாசத்துடன் மேலும் மேலும் ''காக்கை, காக்கை'' எனக் கூறினார்.

சில வருடங்களில் தந்தை கிழவரானார். பையன் பெரியவனானான். ஒரு நாள் தந்தை பாயில் உட்கார்ந்திருந்தார். பையனைச் சந்திக்க யாரோ வீட்டிற்கு வந்தார்கள். தகப்பனார், ''யார் வந்தார்கள்?'' எனக் கேட்டார்.

பையன் பெயரைச் சொன்னான். சிறிது நேரத்தில் மறுபடியும் வேறொருவர் வந்தார். தந்தையும் யாரெனக் கேட்டார். இந்தத் தடவை எரிச்சலுடன் சொன்னான் ''நீங்கள் ஏன் பேசாமல் இருக்கமாட்டீர்கள்? உங்களுக்கு வேலை வெட்டி இல்லையா. யார் வந்தார், யார் போனார் என்று நாள் முழுவதும் ஏன் இப்படித் தொண தொணக்கிறீர்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை பெருமூச்சு விட்டார். கையால் தலையைப் பிடித்துக் கொண்டார். துயரம் நிறைந்த மெல்லிய குரலில் சொல்லத் தொடங்கினார். ''நான் ஒரு முறை கேட்டதற்கு நீ இப்போது கோபப்படுகிறாய். நீ ஒரே வார்த்தையை நூறு தடவைக்கு மேல் 'இது என்ன? இது என்ன?' என்று கேட்டாய். நான் உன்னை ஒரு தடவை கூடக் கோபிக்காமல் 'இது காகம்' என்று சொன்னேன்'' என்றார்.

இப்படி தன் தாய் - தந்தையரை அவமதிக்கும் பிள்ளைகள் கெட்டவர்கள். தாய் - தந்தையர் உன்னை வளர்க்க எத்தனை துன்பங்களை ஏற்றுக் கொண்டார்கள். உன்னிடம் எத்தனை அன்பு காட்டினார்களென்பதை எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும்.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. பகவான் எங்குமிருக்கிறார்

குப்புசாமி தன் மகன் கோபாலுக்குத் தினமும் தூங்கும் முன்பு கதைகள் சொல்லி வந்தார். ஒரு நாள் அவர் கோபாலிடம் ''குழந்தாய்! ஈசன் எங்குமிருக்கிறாரென்பதை ஒரு போதும் மறவாதே'' என்று கூறினார்.

கோபால் இங்குமங்கும் பார்த்துவிட்டுக் கேட்டான். ''அப்பா! பகவான் எங்குமிருக்கிறார்? எனக்குத் தெரியவில்லையே!''

குப்புசாமி கூறினார், ''நாம் கடவுளைக் காண முடியாது. ஆனால் அவர் எங்குமிருக்கிறார். நம்முடைய எல்லா வேலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்.''

கோபால் தந்தையின் இவ்வார்த்தையை மனதில் வைத்துக் கொண்டான். சில தினங்களுக்குப் பிறகு பஞ்சம் வந்தது. குப்புசாமியின் வயலில் எதுவும் விளையவில்லை. ஒரு நாள் கோபாலைக் கூட்டிக் கொண்டு இரவில், இருட்டில் கிராமத்திற்கு வெளியே வந்தார். அவர் மற்றொரு குடியானவனின் வயலிலிருந்து திருட்டுத்தனமாக ஒரு மூட்டை தானியத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினார். கோபாலை வரம்பில் நிறுத்தி ''நீ நான்கு பக்கமும் பார்த்துக்கொண்டிரு, யாராவது இங்கு வந்தால் எனக்குச் சொல்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு குப்புசாமி தானியம் அறுக்க வயலில் உட்கார்ந்ததும், கோபால் ''அப்பா! நிறுத்துங்கள்'' என்றான்.

குப்புசாமி கேட்டான், ''ஏன் யாராவது பார்க்கிறார்களா?'' என்று கேட்டான்.

கோபால், ''ஆம், பார்க்கிறார்கள்.''


குப்புசாமி வயலைவிட்டு வரம்புக்கு வந்தார். நான்கு பக்கமும் பார்த்தார். ஒருவரையும் காணாமல் அவர் மகனிடம் ''எங்கே? யார் பார்த்தார்கள்?'' என்று கேட்டார்.

கோபால், ''இறைவன் எங்குமிருக்கிறார். அனைவரது செயல்களையும் பார்க்கிறாரென்று நீங்கள் தானே சொன்னீர்கள். அப்படியானால் அவர் நீங்கள் தானியம் அறுப்பதைப் பார்க்க மாட்டாரா!''என்றான். மகனின் வார்த்தையைக் கேட்டுக் குப்புசாமி வெட்கமடைந்தார். திருட்டு எண்ணத்தை விட்டு விட்டு அவர் வீடு திரும்பினார்.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. நண்பனின் அறிவுரை

முத்து பணக்காரக் குடியானவன். ஆனால் சோம்பேறி. அவன் தன் வயல்களைப் பார்க்கவோ, களத்துமேட்டிற்கோ போகமாட்டான். தன் பசுக்கள், எருமைகளைக் கூட எங்கு சென்றன என்று தேடமாட்டான். தன் வீட்டுச் சாமான்களையும் பார்த்துக் கொள்ளமாட்டான். எல்லா வேலை களையும் வேலைக்காரர்களிடமே விட்டு விடுவான். அவனுடைய சோம்பேறித்தனத்தாலும் கட்டுப் பாடின்மையாலும் வீட்டு நிலமை மோசமாகி விட்டது. வயலில் நஷ்டம் வரத் தொடங்கியது. அவனிடமிருந்த கால்நடைகளாலும் இலாபம் கிடைக்கவில்லை.

ஒரு நாள் முத்துவின் நண்பன் கிருஷ்ணன் அவன் வீட்டிற்கு வந்தான். கிருஷ்ணன் அவனுடைய வீட்டு நிலயைப் பார்த்தான். அறிவுரைகள் கூறுவதால் முத்து சோம்பேறித்தனத்தை விடமாட்டானென்று அவன் அறிந்து கொண்டான். அதனால் அவன் தன் நண்பன் நன்மைக்காகக் கூறினான், ''நண்பா! உன்னுடைய கஷ்டத்தைப் பார்க்க எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது. உன் வறுமையை நீக்க வல்ல ஓர் எளிய வழியை நான் அறிவேன்.''

முத்து, ''தயவு செய்து அதை எனக்குச் சொல். நான் அதைக் கண்டிப்பாகச் செய்வேன்.''

கிருஷ்ணன், ''எல்லாப் பறவைகளும் விழிக்கும் முன்பே மானஸரோவரில் வசிக்கும் ஒரு வெண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற அன்னப்பறவை பூமிக்கு வருகிறது. அது பகல் 2 மணி வரை பறந்த பின்பு திரும்பிச் செல்கிறது. அது எங்கு எப்போது வருமோ? அதைப் பற்றித் தெரியாது. ஆனால் எந்த மனிதன் அதைத் தரிசிக்கிறானோ, அவனுக்கு எப்போதும், எதற்கும் குறைவே வருவதில்லை.''

முத்து, ''எப்படியோ, நான் அந்த அன்னத்தைக் கண்டிப்பாய் தரிசிப்பேன்.''

கிருஷ்ணன் சென்று விட்டான். முத்து மறுநாள் அதிகாலையிலேயே எழுந்தான். அவன் வீட்டை விட்டு அன்னப்பறவையைத் தேடிக் களத்துமேட்டிற்குச் சென்றான். அங்கே இவனுடைய களத்துமேட்டில் உள்ள கோதுமைக்குவியலைத் தன்னுடைய களத்துமேட்டுக் குவியலில் சேர்க்க ஒரு மனிதன் திருடிக் கொண்டிருப்பதை அவன் பார்த்தான். முத்துவைப் பார்த்ததும் அம்மனிதன் வெட்கமடைந்து மன்னிப்புப் கேட்கத் தொடங்கினான்.

களத்துமேட்டிலிருந்து வீடு திரும்பியவுடன் பசுக்கொட்டிலுக்குச் சென்றான். பசுக்களைப் பாதுகாவலன் பால் கறந்து தன் மனைவியின் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டிருந்தான். முத்து அவனை மிரட்டினான். வீட்டில் சிற்றூண்டி சாப்பிட்டு மறுபடியும் அன்னப் பறவையைத் தேடிப் புறப்பட்டான். மேலும் வயலுக்கும் சென்றான். அங்கே அதுவரை வயலில் கூலியாட்கள் வரவில்லை அவன் அங்கேயே தங்கினான். கூலியாட்கள் வந்ததும் அவன் நேரம் சென்று வந்ததற்காக அவர்களைக் குறை கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அவன் சென்ற இடங்களிலெல்லாம் தனது சொத்துப் பாழாவதைக் கண்டான். அவனது மேற்பார்வையால் எல்லாம் சரியானது.

வெள்ளை அன்னத்தை முத்து தினந்தோறும் அதிகாலையிலேயே எழுந்து தேடத் தொடங்கினான். இப்போது அவனுடைய வேலையாட்கள் சரிவர வேலைகளைச் செய்யத் தொடங்கினர். வேலையாட்கள் திருட்டு நின்று போனது. முன்பு அவன் நோய் நீங்கி உடல் நலம் பெற்று விட்டான். முதலில் வயலில் பத்து மடங்கு தானியம் கிடைத்தது. இப்போது இருபத்தைந்து மடங்கு கிடைக்கத் தொடங்கியது. ஒரு நாள் மறுபடியும் முத்துவின் நண்பன் கிருஷ்ணன் அவனுடைய வீட்டிற்கு வந்தான். முத்து சொன்னான், ''நண்பா! வெள்ளை அன்னம் எனக்கு இதுவரை தென்படவில்லை. ஆனால் அதைத் தேடுவதில் ஈடுபட்டதிலிருந்து எனக்கு இலாபம் நிறையக் கிடைத்துள்ளது.''

கிருஷ்ணன் சிரித்து விட்டுச் சொன்னான். ''உழைப்புதான் அந்த வெள்ளை அன்னம். உழைப்பின் இறக்கை எப்போதும் ஒளிமிக்கதாய் இருக்கிறது. யார் உழைக்காமல் தன் வேலைகளை வேலையாட்களின் பொறுப்பிலேயே விடுகிறார்களோ, அவர் நஷ்டமடைகிறார். யார் தாங்களே உழைக்கிறார்களோ, வேலையாட்களையும் கண் காணிக்கிறார்களோ, அவர்கள் மதிப்பையும் செல்வத்தையும் அடைகிறார்கள்.''

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. சுவர்க்கத்தின் தரிசனம்

கண்ணன் கள்ளங்கபடமற்ற சிறுவன். தினமும் உறங்கும் முன் தன் பாட்டியிடம் கதைகள் சொல்லும்படி கேட்பான். பாட்டி அவனுக்கு நரகலோகம், பாதாளலோகம், கந்தர்வலோகம், சந்திரலோகம், சூரியலோகம் முதலியவை பற்றிய கதைகளைக் கூறுவாள். ஒரு நாள் பாட்டி சுவர்க்கத்தைப் பற்றி விவரித்தாள். சுவர்க்கத்தின் அழகான விவரங்களைக் கேட்ட கண்ணன் நானும் சுவர்க்கத்தைப் பார்க்க வேண்டுமென்று அடம்பிடித்தான். சுவர்க்கத்தைப் பார்க்க முடியாதென்று அறிவுறுத்தியும் கண்ணன் அழத் தொடங்கினான். அழுது கொண்டே தூங்கி விட்டான்.

கனவில் பளபளவென்று மின்னும் ஒரு தேவதை அவன் பக்கத்தில் நிற்பதைப் பார்த்தான். அது சொல்லிற்று ''குழந்தாய்! சுவர்க்கத்தைப் பார்க்க பணம் தரவேண்டியிருக்கிறது. நீ சர்க்கஸ் பார்க்க பணம் கொடுப்பது போல சுவர்க்கத்தைப் பார்க்கவும் நீ பணம் கொடுக்க வேண்டும்.''

கண்ணன் கனவிலேயே ''நான் பாட்டியிடம் பணம் கேட்பேன்'' என்று சொன்னான். ஆனால் தேவதை சொல்லிற்று, ''சுவர்க்கத்தில் உன்னுடைய பணம் செல்லாது. அங்கே பிறருக்கு நன்மை செய்தல் என்ற புண்ணியங்களின் பணம் தான் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது, நீ இந்தப் பெட்டியை உன்னிடத்தில் வைத்துக் கொள். நீ நல்ல காரியம் ஒன்றைச் செய்தால் இதில் ஒரு ரூபாய் வரும், தீய காரியம் ஒன்று செய்தால் ஒரு ரூபாய் மறைந்துவிடும். இப்பெட்டியை எப்போது நிரப்புகிறாயோ, அப்போது நீ சுவர்க்கத்தைப் பார்க்க முடியும்'' என்று சொல்லிப் போயிற்று.

கண்ணனது தூக்கம் கலைந்ததும் தன் தலைப்புறம் உண்மையிலேயே ஒரு பெட்டியைப் பார்த்தான். பெட்டியைக் கண்ட அவன் மிகவும் மகிழ்ந்தான். அன்று பாட்டி அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாள். அதை எடுத்துக்கொண்டு அவன் வீட்டிலிருந்து வெளியேறினான். ஒரு நோயாளிப் பிச்சைக்காரன் அவனிடம் பிச்சை கேட்டான். பிச்சைக்காரனுக்கு கொடுக்காமல் கண்ணன் ஓடிவிட நினைத்தான். ஆனால் அதற்குள் எதிரில் அவனுடைய ஆசிரியர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவர் எப்போதும் இரக்க குணமுள்ள சிறுவர்களைப் புகழ்வது வழக்கம். அவரைப் பார்த்ததும் கண்ணன் பிச்சைக்காரனுக்கு ரூபாயைக் கொடுத்து விட்டான். ஆசிரியர் அவன் முதுகைத் தட்டிப் புகழ்ந்தார்.

வீட்டிற்கு வந்து கண்ணன் பெட்டியைத் திறந்தான். ஆனால் அதில் ஒன்றுமில்லை. அதனால் மிகவும் வருந்தினான். அவன் அழுது கொண்டே தூங்கிவிட்டான். அந்தத் தேவதை மறுபடியும் கனவில் வந்து சொன்னது. ''நீ ஆசிரியர் புகழ்வதற்காகத் தானம் கொடுத்தாய். புகழ்ச்சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. இப்போது ஏன் அழுகிறாய்? ஏதாவது புகழ் ஆசையால் நல்ல காரியம் செய்தால் அது வியாபாரம். அது புண்ணியமில்லை.''

மறுநாள் பாட்டி கண்ணனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தார். காசை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்று இரண்டு ஓரேஞ்சுகள் வாங்கினான். அவன் நண்பன் மோதிலால் காய்ச்சலாக இருந்தான். கடையிலிருந்து திரும்பி அவன் தன் நண்பனைப் பார்க்க அவன் வீட்டிற்கு சென்றான். மோதிலாலைப் பார்க்க அங்கு வைத்தியர் வந்திருந்தார். வைத்தியர் மருந்து கொடுத்து மோதிலாலின் தாயாரிடம் ''இவனுக்கு இன்று ஓரேஞ்சு ரஸம் கொடுங்கள்'' என்று சொன்னார். மோதிலாலின் தாய் ஏழை. அவள் அழுது கொண்டே ''நான் கூலி வேலை செய்து வயிறு வளர்க்கிறேன். பையனின் காய்ச்சலால் அநேக நாட்களாக நான் வேலைக்குப் போக முடியவில்லை. என்னிடம் ஓரேஞ்சு வாங்கப் பணம் இல்லை'' என்றாள்.

கண்ணன் தன்னுடைய இரண்டு ஓரேஞ்சுகளையும் மோதிலாலின் தாயாரிடம் கொடுத்தான். அவள் கண்ணனை வாழ்த்தினாள். வீட்டிற்கு வந்து பெட்டியை கண்ணன் திறந்ததும் அதில் இரண்டு ரூபாய்கள் மின்னிக் கொண்டிருந்தன.

ஒருநாள் கண்ணன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய தங்கை அங்கு வந்து அவனுடைய பொம்மைகளை எடுக்கத் தொடங்கினாள். கண்ணன் அவளைத் தடுத்தான். அவள் கேட்காததால் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தான். அப்பாவிப் பெண் அழத் தொடங்கினாள். இந்தத் தடவை அவன் பெட்டியைத் திறந்த போது முன்பு பல தடவைகளில் அவன் சேர்த்த ரூபாய்கள் மறைந்து போயிருந்தன. அவனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. இனிமேல் எந்தக் கெட்ட காரியமும் செய்வதில்லை எனத் திடமான உறுதி கொண்டான்.

மனிதன் செய்யும் செயலுக்குத் தக்கதாய் அவன் இயல்பும் அமைந்துவிடுகிறது. தீய தொழிலில் ஈடுபடுபவர்களின் தன்மையும் தீயதாக அமைகிறது. நல்ல செயல்களில் ஈடுபட்டால் இயல்பும் நல்லதாகவே அமைகிறது. தீய எண்ணம் தோன்றினாலும் மனம் பதைக்கிறது. கண்ணன் முதலில் காசு பெறும் ஆசையால் நற்செயல்களில் ஈடுபட்டான். மெல்ல மெல்ல அவன் இயல்பும் சீரடைந்தது. நற்செயல்கள் செய்யச் செய்ய பெட்டியும் ரூபாய்களால் நிரம்பியது. சுவர்க்கத்தையே கண்டுவிட்ட மகிழ்ச்சியுடன் பெட்டியை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றான்.

தோட்டத்தில் மரத்தடியில் அமர்ந்தவாறு வயதான துறவி ஒருவர் அழுது கொண்டிருப்பதைக் கண்ணன் பார்த்தான். அவன் துறவியின் அருகில் ஓடிவந்து "ஐயா! ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.

துறவி "குழந்தாய்! உன் கையிலிருக்கும் பெட்டியைப் போலவே என்னிடமும் ஒரு பெட்டி இருந்தது. நான் சுவர்க்கத்தைப் பார்க்கும் ஆசையால் பல தினங்கள் சிரமப்பட்டு ரூபாய்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியை நிரப்பினேன். இந்த ரூபாய்களால் நான் சுவர்க்கத்தைப் பார்ப்பேன் என்று மிகவும் நம்பினேன். ஆனால் இன்று நான் குளிக்கும் போது பெட்டி கங்கையில் விழுந்து விட்டது கண்ணன்'' என்றார். ''ஐயா! நீங்கள் அழாதீர்கள். என்னுடைய பெட்டியும் நிரம்பி உள்ளது. இதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

துறவி ''இதை நீ மிகக் கஷ்டப்பட்டு நிரப்பி யிருக்கின்றாய். இதைக் கொடுப்பதால் உனக்கு வருத்தம் ஏற்படும்'' என்று கூறினார்.

கண்ணன் சொன்னான், ''நான் வருந்த நேராது ஐயா, நானோ சிறுவன், பலநாட்கள் இன்னும் வாழ்வேன். நான் இதைப்போல பல பெட்டிகளை ரூபாயால் நிரப்ப முடியும். நீங்களோ முதியவர். மற்றொரு பெட்டியை நிரப்ப முடியுமா? அதனால் என் பெட்டியை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று சொன்னான்.

துறவி பெட்டியை எடுத்துக்கொண்டு கண்ணனின் கண்களைக் கையால் பொத்தினார். அவன் கண்கள் மூடிவிட்டன. அவனுக்குச் சுவர்க்கம் தெரிய ஆரம்பித்தது. தான் கண்ட சுவர்க்கத்திற்கு, பாட்டி இதுகாறும் வர்ணித்த வர்ணனை, உறை போடக் காணுமா அத்தனை அழகியதாக இருந்தது சுவர்க்கக் காட்சி! என்று அதிசயித்தான்.

கண்களைத் திறந்ததும் கண்ணன், துறவிக்குப் பதில் கனவில் கண்ட தேவதையை எதிரில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தான் முன்பு. ''குழந்தாய்! நல்ல காரியங்கள் செய்பவருக்கு அவர்கள் வீடு சுவர்க்கம் போன்றது. நீ இப்படியே வாழ்க்கையில் நன்மைகளைச் செய்து கடைசியில் சுவர்க்கம் போவாய்'' என்று பகர்ந்த பின் மறைந்தது.

⁂ ⁂ ⁂ ⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. அனைவரிலும் பெரிய புண்ணியாத்மா

பன்னெடுங்காலமாகவே காசி புகழ் வாய்ந்த மாநகரமாகத் திகழ்ந்து வருகிறது. அது வடமொழிக் கல்வியின் மையமாகவும் விளங்கி வருகிறது. அது கடவுள் விசுவநாதரின் நகரம் அல்லது விசுவநாதபுரி என்று சொல்லப்படுகிறது. அவருக்கு அங்கு மிகப் பழமையான கோவில் உள்ளது. ஒரு நாள் விசுவநாதரைப் பூசிக்கும் அர்ச்சகரின் கனவில் பகவான் விசுவநாதர் தோன்றி, கோவிலில் பண்டிதர்களையும், அறம் புரியும் நல்லவர்களையும் கூட்டி ஒரு சபை ஏற்பாடு செய் எனச் சொல்வதாகக் கண்டார். மறுநாளே அர்ச்சகர் இதை நகரத்தின் எல்லா இடத்திலும் வெளியிடச் செய்தார். காசியிலுள்ள பண்டிதர்கள், சன்னியாசிகள், புண்ணியாத்மாக்கள், தானம் செய்பவர்களான அனைவருமே கங்கையில் நீராடிக் கோவிலுக்கு வந்தனர். அனைவரும் சிவலிங்கத்திற்கு நீராடி, கோவிலை வலம் வந்து, மண்டபத்திலும் வெளியேயும் நின்று கொண்டனர். அன்று கோவிலில் மிகவும் கூட்டம். எல்லோரும் வந்தபின்பு அர்ச்சகர் தன் கனவைத் தெரிவித்தார். அனைவரும் ‘‘ஹர ஹர மஹாதேவ’’ என்று துதித்துச் சிவபெருமானை வழிபடத் தொடங்கினார்கள்.

ஈசனுக்கு தீபாராதனை முடிந்ததும் மணி அடிக்கும் சத்தமும் நின்றது. அனைவரும் வழிபாட்டை முடித்துவிட்டனர். அப்போது கோவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று மிகுந்த வெளிச்சம் தோன்றுவதை அனைவரும் பார்த்தனர். விசுவநாதமூர்த்தியின் லிங்கத் திருவுருவின் பக்கத்தில் பெரிய பெரிய இரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஒரு தங்க ஓலையைப் பார்த்தனர். அந்த இரத்தினங்களின் பிரகாசமே கோவிலில் வெளிச்சமாகத் தெரிந்தது. அர்ச்சகர் அந்த இரத்தின ஓலையை எடுத்தார். அதில் வைர எழுத்துக்களால் அனைவரிலும் சிறந்த கொடையாளிக்கும், புண்ணியம் செய்தவனுக்கும் இந்த ஓலை விசுவநாதரால் தரப்பட்ட பரிசு என எழுதப்பட்டிருந்தது.

அர்ச்சகர் பேராசையற்ற உண்மையான பக்தர். அவர் அந்த ஓலையை அனைவருக்கும் காண்பித்தார். அவர் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இங்கு பண்டிதர்களின் சபை கூடும். யார் தம்மை மிகவும் கொடையாளியாகவும், புண்ணியம் செய்த வராகவும் நிரூபிக்கிறாரோ அவருக்கு இந்தத் தங்க ஓலை பரிசாகக் கொடுக்கப்படும்.

நாட்டின் நான்கு பக்கமும் இந்தச் செய்தி பரவிவிட்டது. வெகுதொலைவில் இருந்தும் சன்னியாசிகள், விரதம் மேற்கொள்பவர்கள், கொடையாளிகள் காசிக்கு வரத்தொடங்கினர். ஓரந்தணர் இடைவிடாமல் பல மாதங்கள் சாந்த்ராயண நோன்பு செய்தார். அவர் அந்தத் தங்க ஓலையைப் பெற்றுக்கொள்ள வந்தார். ஆனால் தங்க ஓலையை அவர் கையில் கொடுத்ததும் அது மண்ணாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதர் பல பள்ளிக்கூடங்கள், சேவை இல்லங்கள் என்று தன் சொத்து முழுவதையும் செலவிட்டார். பல தாபனங்களுக்குப் பண உதவி செய்து வந்தார். பத்திரிகைகளில் அவர் பெயர் வெளியாகியது. அவரும் தங்க ஓலையை வாங்க வந்தார். அவர் கையிலும் அது மண்ணாக மாறி விட்டது. அர்ச்சகர் சொன்னார், ‘‘நீங்கள் பட்டம், கீர்த்தி, பெறும் ஆசையால் கொடையளித்தீர் என்று தோன்றுகின்றது. பெயருக்கு ஆசைப்பட்டுச் செய்யும் கொடை உண்மையான கொடை அல்ல.’’

இப்படி அநேகர் வந்தும் யாருக்கும் தங்க ஓலை கிடைக்கவில்லை. அனைவர் கைகளிலும் அது மண்ணாக மாறியது. இப்படிப் பல மாதங்கள் சென்றன. தங்க ஓலையைப் பெற அநேக மக்கள் விசுவநாதர் கோவிலுக்குப் பக்கத்திலேயே தான தர்மங்கள் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் அது அவர்களுக்கும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் ஒரு முதிய குடியானவன் வெளியூரிலிருந்து வந்தான். அவன் துணிகள் அழுக்காகவும், கிழிந்துமிருந்தன. அவன் விசுவநாதரைத் தரிசிக்க வந்தான். அவனிடத்தில் துணிகளில் முடியப்பட்ட சிறிது சத்து மாவும், ஒரு கிழிந்த கம்பளமும் இருந்தது. கோவிலுக்குப் பக்கத்திற் சனங்கள் ஏழைகளுக்குத் துணிகளும், பூரி - மிட்டாய்களும் கொடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஒரு தொழுநோயாளி கோவிலிலிருந்து தொலைவில் இருமிக் கொண்டிருந்தான். அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து செல்ல முடியவில்லை. அவன் உடல் முழுவதும் புண்களாயிருந்தன. அவன் பசியோடி ருந்தான். ஆனால் யாரும் அவனைக் கண்டு கொள்ளவில்லை. முதிய குடியானவனுக்கும் தொழு நோயாளியிடம் இரக்கம் ஏற்பட்டது. அவனுக்குச் சாப்பிடத் தன் சத்து மாவை கொடுத்தான். மேலும் தன் கம்பளியை அவன் மேல் போர்த்தினான். பிறகு அங்கிருந்து தரிசனத்துக்கு கோவிலுக்குச் சென்றான்.


ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் ஆலயம் வருகின்ற பக்தர்கள் அனைவரது கையிலும் ஒரு முறை அந்த ஓலையைக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார் அர்ச்சகர். கிழக்குடியானவன் விஸ்வநாதரைத் தரிசித்து வெளியே வந்ததும் அர்ச்சகர் தங்க ஓலையை அவன் கையில் கொடுத்தார். அவன் கையில் தங்க ஓலை சென்றதுமே அதிலுள்ள இரத்தினங்கள் இருமடங்கு ஒளிரத் தொடங்கின. எல்லா மக்களும் கிழவனைப் பாராட்டினார்கள்.

அர்ச்சகர் இந்தத் தங்க ஓலையை விஸ்வநாதர் உனக்குக் கொடுத்துள்ளார். யார் பேராசையில்லாதவரோ, பலன் கருதாமல் துயருற்ற வர்களுக்கு உதவுகிறாரோ, அவரே அனைவரிலும் சிறந்த பெரிய புண்ணியவான் என்று கூறினார்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. ஈக்களின் பேராசை

ஒரு வியாபாரி தன் வாடிக்கையாளருக்குத் தேன் விற்றுக்கொண்டிருந்தான். வியாபாரியின் கையிலிருந்த தேன் பாத்திரம் திடீரென்று கீழே விழுந்தது. நிரம்பத் தேன் தரையில் சிந்தி விட்டது. முடிந்த அளவு கீழே சிந்திவிட்ட தேனை வியாபாரி எடுத்துவிட்டான். ஆயினும் சிறிதளவு தேன் தரையோடு ஒட்டிக் கொண்டுவிட்டது. அநேக ஈக்கள் தேனின் இனிப்புச் சுவையின் ஆசையால் வந்து தேன் மேல் உட்கார்ந்தன. இனிப்பான தேன் அவைகளுக்குப் பிடித்ததால், வெகு வேகமாகத் தேனை நக்கத் தொடங்கின. வயிறு நிரம்பும் வரை நக்கிக் கொண்டிருந்தன.

வயிறு நிரம்பியதும் ஈக்கள் பறந்து செல்ல விரும்பின. ஆனால் அவைகளின் இறக்கைகள் தேனில் ஒட்டிக்கொண்டு விட்டன. பறக்க முயற்சி செய்யச் செய்ய, மேலும் மேலும் ஒட்டிக் கொண்டன. அவைகளின் உடல்பூராவும் தேன் ஒட்டிக் கொண்டுவிட்டன.

நிறைய ஈக்கள் தேனில் புரண்டு புரண்டு இறக்கைகளை விடுவிக்க முடியாமல் இறந்து விட்டன. நிறைய ஈக்கள் இறக்கைகள் ஒட்டிக்கொண்டதால் துடித்துக் கொண்டிருந்தன. ஆனால் இன்னும் பல புதிய ஈக்கள் தேன் உண்ணும் ஆசையால் அங்கே வந்து கொண்டிருந்தன. இறந்தவைகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துடித்துக் கொண்டிருப்பவைகளையும் பார்த்தும் கூட அவைகளால் தேன் உண்ணும் பேராசையை விட முடியவில்லை.

ஈக்களின் துன்பநிலையையும், அவைகளின் முட்டாள்தனத்தையும் பார்த்த வியாபாரி ''எந்த ஜனங்கள் நாக்கு ருசியால் பேராசைப்படுகிறார்களோ, அவர்கள் ஈக்களைப் போல் முட்டாளாகின்றனர். ருசியின் சிறிது நேர இன்பத்திற்காகத் தங்கள் தேகநலத்தை இழக்கின்றனர். நோயாளிகளாகித் துடிக்கின்றனர். மேலும் விரைவில் மரணத்தையும் தழுவுகின்றனர'' என்றான்.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ආසියා පදනමෙන් තිළිණයකි
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | විකිණීමට නොවේ | விற்பனைக்கல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஒற்றுமையின் வலிமை

அருணாசலம் என்பவருக்கு ஐந்து புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் கண்ணன், செந்தில், ராமு, பாலு, சுரேஷ் - அவர்கள் ஐவரும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். சிறு விஷயங்களில் கூட அவர்களுள் நான் - நீ என்று கைகலப்பு நிகழ்வதும் வழக்கம்.

அருணாசலம் தன் குமாரர்களின் சண்டையால் களைத்துவிட்டான். ஒரு நாள் அவன் அவர்களுக்கு அறிவுறுத்த எண்ணி பக்கத்தில் கூப்பிட்டான். முதலில் மெல்லிய உலர்ந்த ஐந்து சிறு குச்சிகளை ஒரு சிறிய கட்டாகக் கட்டினான். மக்களிடத்தில் ''உங்களில் யார் இக்குச்சிகளின் கட்டை உடைக்கிறீர்களோ, அவருக்கு ஒரு ரூபாய் பரிசு கிடைக்கும்'' என்று சொன்னான். ஐந்து பேரும் நான் தான் முதலில் ஒடிப்பேன் என்று சண்டையிட்டனர். அவர்களுக்கு, யாராவது ஒருவன் முதலில் எடுத்து உடைத்துவிட்டால் ரூபாய் அவனுக்குக் கிடைத்துவிடுமே என்ற பயமிருந்தது. அருணாசலம் ''முதலில் கடைசிப் பையன் சுரேஷை உடைக்க விடுங்கள்'' என்றான்.

சுரேஷ் முதலில் கட்டை எடுத்துப் பலத்துடன் உடைக்கத் தொடங்கினான். பல்லைக் கடித்து, கண்களை உருட்டி மிகுந்த பலத்தைக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை ஆறாகப் பெருகியது. ஆனால் கட்டில் இருந்த குச்சிகள் உடையவில்லை. அவன் பாலுவிடம் கொடுத்தான். அவனும் பலம் காட்டி உடைக்க முயன்றும் முடியவில்லை. இவ்விதமாக எல்லாப் பையன்களும் ஒவ்வொருவராகக் கட்டை முறையே எடுத்து பலம் காட்டி உடைக்க முயன்றும், யாரும் வெற்றி பெறவில்லை.


அருணாசலம் கட்டை அவிழ்த்து ஒவ்வொரு குச்சியாக எல்லாப் பையன்களுக்கும் கொடுத்தான். இத்தடவை அனைவரும் பட பட எனக் குச்சிகளை உடைத்தார்கள். அருணாசலம் சொன்னான், ''பார்த்தீர்களா இக்கிளைகள் ஒன்றாக ஒரு கட்டாக இருக்கும் போது உங்களில் ஒருவரால் கூட உடைக்க முடியவில்லை. தனித்தனியே பிரித்ததும் நீங்கள் இலகுவாக எல்லாவற்றையும் உடைத்தீர்கள். இம்மாதிரியே நீங்கள் உங்களுக்குள் சண்டையிட்டும், தனித்துமிருந்தால் மற்றச் சனங்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள். அமுக்கப் பார்ப்பார்கள். ஆனால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனிருப்பின், யாரும் உங்களை எதிர்க்கத் துணியமாட்டார்கள்.'' அருணாசலத்தின் பிள்ளைகள் அன்றிலிருந்தே தங்களுக்குள் சண்டையிடுவதை விட்டுவிட்டு ஒற்றுமையுடனிருந்தார்கள்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!**

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. மருத்துவர் விரட்டப்பட்டார்

கந்தன் மகன் பாபு நோய் வாய்ப்பட்டிருந்தான். அவன் கோடை வெயிலில் மாம்பழம் பொறுக்கத் தோட்டத்திற்குச் சென்றான். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. வெயிலில் அலைந்ததால் அவனுக்குக் காய்ச்சல் தீவிரமாக ஏறிற்று. கந்தன் தன் மகனுக்குச் சிகிச்சையளிக்க மருத்துவரைக் கூப்பிட்டான்.

மருத்துவர் வந்து பையனின் நாடியைப் பார்த்து ''இவனுக்கு காய்ச்சல் அதிகமாகி விட்டது. இது மிகவும் அலைக்கழிக்கும் போல் தோன்றுகிறது. நடுப்பகலில் வீட்டிலிருந்து வெளியே போக அப்படி என்ன வேலை? இது கெட்ட பழக்கம். பெரியவர்கள் கூறும் வார்த்தையை மதிக்காத பையன்கள் கடைசியில் துன்பப்படுவார்கள்'' என்றார்.

மருத்துவர் உபதேசம் செய்து கொண்டே பையனை மிரட்டிக்கொண்டிருந்தார். கந்தனுக்கு இது பிடிக்கவில்லை. அவர் சொன்னார் ''மருத்துவரே! உம்மைக் கூப்பிட்டு நான் தவறு செய்துவிட்டேன். உங்களுடைய கட்டணத் தொகையைப் பெற்றுக் கொண்டு செல்லுங்கள். நான் என் பையனுக்கு மருத்துவம் வேறு டாக்டரிடம் செய்து கொள்கிறேன். நீங்களோ நோயாளிப் பையனை மிரட்டி வருத்தப்படச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.''




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் பாவம் வெட்கப்பட்டுச் சென்று விட்டார். துன்புற்றிருப்பவர்களிடம் குறைகளைக் கண்டுபிடித்துக் கூறி அறிவுரைகளையும் கூறி மேலும் வருத்தமுறச் செய்யக்கூடாது. அச்சமயம் அவர்களுக்கு ஆறுதல் கூறி உதவி செய்வதுதான் சரியான வழி.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. இரு குதிரைகள்

ஒரு வியாபாரியிடத்தில் இரண்டு மட்டக் குதிரைகள் இருந்தன. அவன் அவைகளின் மீது பொருட்களை வைத்து மலையிலுள்ள கிராமங்களில் விற்று வந்தான். ஒரு தடவை அதில் ஒரு குதிரைக்கு நோய் வந்தது. தன்னுடைய ஒரு குதிரைக்கு உடல் நிலை சரியில்லை என்று வியாபாரிக்கு தெரியாது. அவன் கிராமத்தில் விற்பதற்காக உப்பு, வெல்லம், பருப்பு, அரிசி முதலியவைகளை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. அவன் இரு குதிரைகள் மேலும் சமமாகப் பொருளைச் சுமத்தினான். பின் புறப்பட்டான். மேடும் பள்ளமுமான மலை வழியில் செல்ல நோயாளிக் குதிரைக்குக் கஷ்டம் ஏற்பட்டது. அது மற்றைய குதிரையிடம் ‘‘இன்று என் உடல்நிலை சரியில்லை. நான் என் முதுகிலுள்ள ஒரு சாக்கு மூட்டையை விழச் செய்கிறேன். நீ இங்கேயே நில். நம் எசமான் அதை உன் முதுகில் வைப்பார். என் பளுச் சிறிது குறைந்ததும் நான் உன்னுடன் வருவேன் நீ முதலில் சென்று விட்டால் வைத்துவிடுவார்’’ என்றது.

நோயாளிக் குதிரை பேசவில்லை. ஆனால் அதன் உடல்நிலை மேலும் மோசமாகி விட்டது. போகும் சமயம் ஒரு கல்லின் நுனி தடுக்கிக் கீழே விழுந்து, பள்ளத்தில் உருண்டு இறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரி தன் ஒரு குதிரை இறந்ததால் மிகவும் வருத்தப்பட்டான். சிறிது நேரம் அங்கு நின்றான். இறந்த குதிரையின் சுமைகளை மற்றைய குதிரையின் மேல் கட்டினான். இப்போது அக்குதிரை என் நண்பனின் சொற்படி ஒரு மூட்டையை வாங்கிக் கொண்டிருந்தால், இப்போது இப்படி அனைத்து மூட்டைகளையும் சுமக்க வேண்டியிருக்காதே? என்று சொல்லி மனதிற்குள் வருந்திக் கொண்டது.

கஷ்டத்திலுள்ள தன் நண்பனுக்கு உதவி செய்யாவிடில் பின்னால் வருந்த நேரிடுகிறது. இதிலிருந்து கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்பது விளங்குகிறது.

*** *** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. பிரம்மாவின் பைகள்

இவ்வுலகைப் படைக்கும் பிரம்மதேவன் ஒரு தடவை ஒரு மனிதனைத் தன்னிடம் கூப்பிட்டு ''நீ என்ன விரும்புகிறாய்?'' என்று கேட்டார்.

மனிதன், ''நான் மேன்மையாக வாழ விரும்புகிறேன். சுகமும், அமைதியும் அடைய விரும்புகிறேன். மேலும் எல்லோரும் என்னைப் புகழ்ந்து கொண்டாடவும் விரும்புகிறேன்'' என்று கூறினான்.

பிரம்மா மனிதனுக்கு எதிரில் இரண்டு மூட்டைகளை நிரப்பிக் கொடுத்தார். அவர் சொன்னார் ''இம்மூட்டைகளை எடுத்துச் செல். இதில் ஒரு மூட்டையில் உன் பக்கத்து வீட்டுக்காரனின் குற்றங்கள் நிரம்பியுள்ளன. இதை முதுகில் மாட்டிக்கொள். இதை எப்போதும் மூடியே வைத்திரு. நீயும் பார்க்கக் கூடாது. மற்றவர்களுக்கும், காண்பிக்கக் கூடாது. மற்றைய மூட்டையில் உன்னுடைய குற்றங்கள் நிரம்பியுள்ளன. அதை எதிரில் தொங்கவிடு. அடிக்கடி அதை திறந்து பார்.''

மனிதன் இரு மூட்டைகளையும் எடுத்துக் கொண்டான். ஆனால் அவன் ஒன்றை மட்டும் மறந்துவிட்டான். அவன் தன் கெட்ட குண மூட்டையை தன் முதுகில் கட்டிக் கொண்டு, அதன் வாயை இழுத்து மூடி விட்டான். தன் பக்கத்து வீட்டானின் தீய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குண மூட்டையை எதிரில் தொங்கவிட்டான். அதன் வாயைத் திறந்து அவன் பார்ப்பான். பிறருக்கும் காண்பிப்பான். அதனால் அவன் கேட்ட வரங்கள் எல்லாம் மாறி விட்டன. அவன் கீழ்நிலைக்குச் செல்லத் தொடங்கினான். அவனுக்கு வாழ்வில் வருத்தமும், அமைதியின்மையும் ஏற்பட்டது. எல்லாச் சனங்களும் அவனைக் கெட்டவன் என நினைத்தனர்.

நீங்கள் இந்தத் தவறை செய்யாமலிருப்பின் நற்கதி கிடைக்கும். சுகமும், அமைதியும் கிடைக்கும். உலகம் உங்களை மதிக்கும். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் உங்கள் பக்கத்து வீட்டார், அறிமுகமானவர்களின் தவறுகளைப் பார்ப்பதை விட்டுவிட வேண்டும். உங்களுடைய தவறுகளில் எப்போதும் கவனம் வைக்கவேண்டும்.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. உண்மையான வெற்றி

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவன் பெயர் வீரமணி. வீரமணி சிங்கத்தைப் போன்ற பயங்கரமான தோற்றமும், கர்வமும் கொண்டவன். அவன் சிறிய விடயத்திற்குக் கூட கோபம் கொண்டு சண்டை செய்து வந்தான். கிராமத்துச் சனங்களிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. அவன் யாருடைய வீட்டிற்கும் போவதில்லை. வழியில் யாரைச் சந்தித்தாலும் வணக்கம் கூடச் சொல்வதில்லை. கிராமத்து குடியானவர்களும் அவன் கர்வம் கொண்டவன் என்பதால் அவனிடம் பேசுவதில்லை. அந்தக் கிராமத்தில் மாணிக்கம் என்னும் குடியானவன் வந்து தங்கினான். அவன் மிகவும் சாதுவாகவும், நல்ல மனிதனாகவுமிருந்தான். எல்லோரிடமும் வணக்கத்துடன் பேசுவான். எல்லோருக்கும் சிறிதளவாவது உதவி செய்து வந்தான் எல்லாக் குடியானவர்களும் அவனுக்கு மரியாதை செய்து வந்தனர். கிராமத்துக் குடியானவர்கள் மாணிக்கத்திடம் ''தம்பி மாணிக்கம்! நீ ஒரு போதும் வீரமணி வீட்டிற்குச் செல்ல வேண்டாம். அவனிடத்திலிருந்து விலகியே இருக்கவும். அவன் பெரிய சண்டைக்காரன்'' என்று சொன்னார்கள்.

மாணிக்கம் சிரித்துக் கொண்டே ''வீரமணி என்னிடம் சண்டையிட்டால் நான் அவனைக் கொன்றுவிடுவேன்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றக் குடியானவர்கள் சிரித்தார்கள். அவர்களுக்கு மாணிக்கம் மிகவும் கருணையுள்ளவனென்று தெரியும். அவன் யாரையும் கொல்வதில்லை, யாரையும் திட்டக்கூட மாட்டான் என்றார்கள் ஆனால் இவ்விடயத்தை யாரோ வீரமணியிடம் சொல்லிவிட்டனர். வீரமணிக்குக் கோபத்தால் முகம் சிவந்தது. அன்றிலிருந்து அவன் மாணிக்கத்திடம் சண்டையிடும் காரியங்களில் ஈடுபட்டான். மாணிக்கத்தின் வயல்களில் தன் எருதுகளை மேயவிட்டான். அவை பயிரை மிகுதியாக மேய்ந்து விட்டன. ஆனால் மாணிக்கம் சத்தமில்லாமல் எருதுகளை விரட்டினான். வீரமணி மாணிக்கத்தின் வயலில் தண்ணீர் பாயும் வரம்பை உடைத்து விட்டான். தண்ணீர் ஓடத் தொடங்கிற்று. மாணிக்கம் பேசாமல் வரம்பை அடைத்தான். இப்படியே வீரமணி மாணிக்கத்திற்கு தொடர்ந்து நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால் மாணிக்கம் ஒரு தடவை கூடச் சண்டை ஏற்பட அவகாசமளிக்கவில்லை.

ஒருநாள் மாணிக்கம் வீட்டிற்கு அவர் சம்பந்தி யாழ்ப்பாணத்திலிருந்து சுவையுள்ள மாம்பழங்களை அனுப்பினார். மாணிக்கம் எல்லாக் குடியானவர்களின் வீட்டுக்கும் மாம்பழம் கொடுத்தனுப்பினான். ஆனால் வீரமணி ‘‘நான் பிச்சைகாரனில்லை’’ என்று சொல்லி அந்தப் பழத்தை திருப்பியனுப்பி விட்டான். ‘‘நான் பிறருடைய கொடையை ஏற்பதில்லை’’ என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்காலம் வந்தது. வீரமணி ஒரு வண்டி நிறையத் தானியங்களை நிரப்பி கிராமத்திலிருந்து வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு கால்வாயின் சேற்றில் அவனுடைய வண்டி புதைந்து விட்டது. வீரமணியின் எருதுகள் மிகவும் மெலிந்தவை. அவைகளால் வண்டியை சகதியிலிருந்து வெளியே இழுக்க முடியவில்லை. கிராமத்தில் இந்த விஷயம் தெரிந்ததும் அனைவரும் சொன்னார்கள். ''வீரமணி மிகவும் கெட்டவன். இரவு முழுவதும் கால்வாயிலேயே கிடக்கட்டும்'' என்று சொன்னார்கள்.

ஆனால் மாணிக்கம் தன் பலம் பொருந்திய எருதுகளை பிடித்துக்கொண்டு கால்வாயை நோக்கிச் சென்றான். சனங்கள் அவரைத் தடுத்து ''மாணிக்கம்! வீரமணி உனக்குப் பலவிதங்களில் தொல்லை கொடுத்திருக்கிறான். என்னுடன் சண்டை போட்டால் நான் அவனைக் கொன்றுவிடுவேன் என்று நீ சொல்லியிருந்தாய். பின்பு இன்று அவனுக்கு உதவி செய்ய ஏன் போகிறாய்?'' என்று தடுத்தார்கள். மாணிக்கம் சொன்னான் ''நான் இன்று உண்மையாக அவனைக் கொல்வேன். நீங்கள் எல்லோரும் காலையில் இதைப்பாருங்கள்'' என்று எருதுகளுடன் சென்றான்.

மாணிக்கம் எருதுகளுடன் வருவதைப் பார்த்ததும் வீரமணி செருக்குடன் ''நீ உன் எருதுகளை எடுத்துக் கொண்டு திரும்பிப்போ. எனக்கு யாருடைய உதவியும் வேண்டாம்'' என்றான். மாணிக்கம் உன் மனதில் திட்டத் தோன்றினால் திட்டு. கொல்லத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினால் என்னைக்கொல். இச்சமயம் நீ ஆபத்திலிருக்கிறாய். உன்னுடைய வண்டி சேற்றில் சிக்கியுள்ளது. இரவும் வந்து கொண்டிருக்கிறது. நான் உன் பேச்சை இப்போது ஒத்துக்கொள்ள மாட்டேன். என்று வீரமணியினுடைய எருதுகளை அவிழ்த்துவிட்டு தன்னுடைய வண்டியில் கயிற்றைக் கட்டினான். அவனுடைய பலமிக்க எருதுகள் வண்டியைக் கால்வாயிலிருந்து வெளியே கொண்டு வந்தன. வீரமணி வண்டியை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பினான். அவனுடைய கெட்டகுணம் அன்றைய தினத்திலிருந்து மாறிவிட்டது. ‘‘மாணிக்கம் தன் உதவி செய்யும் குணத்தின் மூலம் என்னைக் கொன்று விட்டான். இப்போது என்னுள் இருந்த திமிர் பிடித்த வீரமணி எங்கு ஓடி ஒளிந்தானோ!?’’ என்றான். இப்போது அவன் அனைவரிடத்திலும் வணக்கத்துடனும், பிரியமாகவும் நடந்து கொள்ளத் தொடங்கினான். கெட்டதை நல்லதால் வெல்வதே உண்மையான வெற்றி. மாணிக்கம் உண்மையான வெற்றியை அடைந்தான்.

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்**

**- திருக்குறள்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. முட்டாள் அரசன்

மாமன்னர் அக்பர் பீர்பாலை மிகவும் போற்றி வந்தார். பீர்பால் நுண்ணறிவு மிக்கவர். அவர் மனதைக் கவரக்கூடிய பேச்சுக்களால் மன்னருக்கு இன்பம் கொடுத்து வந்தார். அக்பர் - பீர்பாலின் மனம் கவரும் கதைகள் மிகவும் புகழ் பெற்றவை. அவைகளில் சில விஷயங்கள் முக்கியத்துவம் பெற்றவை. ஒரு நிகழ்ச்சியை இங்கு விவரிக்கின்றோம்.

ஒரு தடவை மன்னர் தன் அரண்மனைக்குச் சென்றார். மன்னரின் பட்டத்தரிசி தன்னுடைய தோழியுடன் அச்சமயம் பேசிக்கொண்டிருந்தாள். மன்னர் திடீரென்று போய் நின்றார். இராணி எழுந்து நின்று சிரித்துச் சொன்னாள் ‘‘வாருங்கள் முட்டாள் அரசரே!’’ என்றாள்.

மன்னர் மிகவும் மனம் வருந்தினார். இராணி ஒரு போதும் மன்னரை அவமதித்ததில்லை. இராணி அறிவாளி என்று மன்னர் அறிவார். அவள் காரணமில்லாமல் அப்படிப் பேசமாட்டாள். இராணி அவரை முட்டாள் அரசன் என்று ஏன் சொன்னாள்? என்று மன்னரால் அறிய முடியவில்லை. இராணியிடம் கேட்பது மன்னருக்குச் சரியான செயலாகத் தோன்றவில்லை. சிறிது நேரம் அங்கிருந்து விட்டு தன் அறைக்குச் சென்று விட்டார்.

மன்னர் வருத்தமாய் உட்கார்ந்திருந்தார். அப்போது பீர்பால் அவரிடம் வந்தார். பீர்பாலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததுமே மன்னர், ‘‘வாருங்கள் முட்டாள் அரசே!’’ என்றார்.

பீர்பால் சிரித்துக்கொண்டே, ‘‘ஆம் முட்டாள் அரசே!’’ என்றார்.

மன்னர் கண்களை உயர்த்தி ‘‘பீர்பால்! நீ என்னை முட்டாள் அரசர் என்று ஏன் சொல்கிறாய்!’’ என்று கேட்டார்.


பீர்பால் மனிதன் ஐந்துவிதமாக முட்டர்ளென்று சொல்லப்படுகிறான். இருவர்தனித்துப் பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் அழைக்கப்பட்டால், முன்னறிவிப்பின்றிச் சென்று நிற்பவன் முட்டாள் என்றழைக்கப்படுகிறான். இருவர் பேசிக் கொண்டி ருக்கும் போது, அவன் பேசி முடிக்கும் முன்னரே, பேசுபவனும் முட்டாள். குற்றங்குறை இல்லாதிருக்கும் போதே பிறரிடம் குற்றம் கண்டு தூற்றுபவனும் முட்டாள். இத்தகைய மூடர்களிடம் சென்று நட்புக் கொள்பவனும் முட்டாளே.

மன்னர், பீர்பாலின் விடையால் மிக்க சந்தோஷ மடைந்தார். நீங்கள் இவ்விடயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எப்போதும் நீங்கள் இத்தகைய தவறுகளைச் செய்யக் கூடாது. மக்கள் உங்களையும் முட்டாளரசர் என்று சொல்லக்கூடாது.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. போ! போ!! வா! வா!!

ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் பெயர் சுவாமிநாதன். அவனிடம் பல வயல்கள் இருந்தன. அவனிடம் பல வேலையாட்களும், கூலியாட்களும் வேலை செய்தனர். அவன் வேலை செய்யாது, சுறுசுறுப்பில்லாத முழுச் சோம்பேறி. அவன் ஒருபோதும் தன் வயல்களைப் பார்க்கப் போவதில்லை. தன் வேலையாட்களையும், கூலியாட் களையும் அனுப்பி வேலை செய்வித்து வந்தான்.

விருப்பப்படி வேலையாட்களும், கூலிகளும் வேலை செய்து வந்தனர். வயலில் சிறிது வேலை செய்துவிட்டு, மீதிநேரம் அங்குமிங்கும் சுற்றுவதும், வீண்பேச்சுப் பேசுவதும், தத்தம் வீடுகளுக்குச் சென்று விடுவதுமாக இருந்தனர். வயலை ஆழமாக உழுவதில்லை. தண்ணீர் முறையாக பாய்ச்சுவதில்லை. நடுவில் வளரும் புல்பூண்டுகளையும் களைவதில்லை. அதனால் நிலத்தில் விளைச்சல் மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது. சிறிது காலத்தில் சுவாமிநாதன் ஏழையாகி விட்டான்.

அதே கிராமத்தில் ஆறுமுகம் என்னும் மற்றொரு குடியானவன் இருந்தான். அவன் சுவாமிநாதனிடமிருந்து சில வயல்களை வாங்கி உழுதான். ஆனால் அவன் உழைப்பாளி. தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிகளோடு தானும் வயலுக்குச் செல்வான். விடாது தொடர்ந்து உழைத்தான். அவன் வயல் நன்றாக உழப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டது. நல்ல உரங்களை போட்டான். களைகளை நீக்கினான். சமயத்தில் விதை விதைக்கப்பட்டது. அவனது வீட்டார்களும் வயலில் வேலை செய்தார்கள். அவன் வயலில் தானியம் நன்றாக விளைந்தது. வரி கொடுத்தும், செலவு செய்தும் கூட அவனிடம் நெல் நிறைய இருந்தது. சிறிது காலத்தில் ஆறுமுகம் பணக்காரனாகிவிட்டான். இப்போது சுவாமிநாதன் ஏழையாகி விட்டான். வட்டிக்கடைக்காரர்களின் கடன் தலைக்குமேல் போய்விட்டன. அவன் தன் வயலை விற்கும் நிலைமை வந்து விட்டது பற்றி அறிந்தான். இச்செய்தி அறிந்ததும் ஆறுமுகம் அவனிடம் வந்து ‘‘நீங்கள் உங்கள் வயலை விற்க விரும்புவதாக நான் கேள்விப்பட்டேன். நீங்கள் தயவு செய்து உங்கள் வயலை என்னிடம் விற்றுவிடுங்கள். நான் பிறர் கொடுப்பதைவிடக் குறைவாக கொடுக்க மாட்டேன்’’ என்று சொன்னான்.

சுவாமிநாதன் வியப்புடன் கேட்டான், ‘‘சகோதரா ஆறுமுகம்! என்னிடம் இவ்வளவு வயல்களிருந்தும் நான் கடனாளியாகிவிட்டேன். ஆனால் உன்னிடம் பணம் எங்கிருந்து வந்தது? நீ என்னிடமிருந்து சிறிதளவு வயலை எடுத்துக்கொண்டு விவசாயம் செய்கிறாய். அவ்வயல்களுக்கு வரியும் நீதான் கொடுக்கிறாய். தவிர வீட்டுச் செலவும் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. என் வயல்களை வாங்க உனக்கு யார் பணம் கொடுத்தார்கள்?''

ஆறுமுகம் சொன்னான், ''எனக்கு யாரும் பணம் கொடுக்கவில்லை. நான் வயலின் விளைச்சலிலிருந்து கிடைத்த பணத்தில் ஒரு பகுதியைச் சேமித்து வைத்தேன். உங்கள் வயலுக்கும், என் வயலுக்கும் ஒரு வித்தியாசமுள்ளது. நீங்கள் வேலையாட் களிடத்திலும், கூலிகளிடத்திலும் வேலைக்கு போ! போ!! என்று சொல்கிறீர்கள். இதனால் தங்கள் சொத்தும் போய்விட்டது. நான் வேலையாட்கள் வரும் முன்பே வயலுக்குச் சென்று தயாராகி அவர்களை என்னுடன் வேலை செய்ய வா! வா!! என அழைக்கிறேன். அதனால் எனக்குச் செல்வம் வருகிறது.'' இப்போது சுவாமிநாதன் சரியாக விஷயத்தை தெரிந்து கொண்டான். சிறிது வயலை ஆறுமுகத்திடம் விற்றுக் கடனை அடைத்தான். மீதி வயல்களில் தன் சக்தி முழுவதையும் செலவழித்து விவசாயம் செய்தான். சிறிது காலத்தில் அவன் நிலைமை மாறிவிட்டது. அவனிடம் மகிழ்ச்சியும், செல்வமும் வந்து சேர்ந்தன.

*** *** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. முயல்களும், தவளையும்

ஒரு தடவை சில முயல்கள் கோடை காலத்தில் ஒரு வறண்ட இலந்தைப் புதரில் ஒன்று சேர்ந்தன. வயல்களில் அந்நாட்களில் தானியமில்லாததால் அவைகள் எல்லாம் பசியோடிருந்தன. தவிர இந்நாட்களில் காலை, மாலை உலாவ வருபவர் களோடு வரும் நாய்களும் அவைகளைத் துன்புறுத்தின. மைதானத்திலுள்ள புதர்களும் வறண்டிருந்தன. நாய்கள் விடாமல் துரத்துவதால் வறண்ட மைதானத்தில் ஒளிந்து கொள்ளப் புதர்கள் இல்லாமல் துன்புற்றன. ஆகவே துயரத்தினால் அமைதியிழந்து காணப்பட்டன. ஒரு முயல் ''பிரம்மா நம் குலத்துக்கு மிகவும் அநியாயம் செய்திருக்கிறார். நம்மைப் பலமில்லாமலும். சிறிய உருவத்துடனும் படைத்திருக்கிறார். எதிரிகளி டமிருந்து நாம் தப்புவதற்கு எவ்வித வழியுமில்லை. எந்த விலங்கைப் பார்த்தாலும் நாம் தப்பியோட வேண்டியுள்ளது. எல்லாப் பக்கங்களிலிருந்தும் படைப்புக் கடவுள் ஆபத்தை நம்மவர்களின் தலையில் சுமத்தி விட்டார்'' என்று சொன்னது. மற்றொரு முயல் ''நான் இந்தத் துயரமும், கவலையும் நிறைந்த வாழ்க்கையில் துன்பப்படுகிறேன். நான் குளத்தில் மூழ்கி இறக்க முடிவு செய்துள்ளேன்'' என்றது.

மூன்றாவது முயலும் ''நானும் இறக்க விரும்புகிறேன். இனி மேலும் கஷ்டப்பட என்னால் முடியாது. நான் இப்போதே குளத்தில் குதிக்கப் போகிறேன்'' என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நாங்களனைவரும் உன்னுடன் வருகிறோம். நாம் அனைவரும் ஒன்றாகவே இறப்போம்” என்று எல்லா முயல்களும் கூறின. எல்லா முயல்களும் குளத்தை நோக்கிச் சென்றன. குளத்திலிருந்து அநேக தவளைகள் வெளியேவந்து கரையில் உட்கார்ந்திருந்தன. முயல்களின் வருகைச் சத்தம் கேட்டதும் அவைகள் தண்ணீரில் பட் பட் என்று குதித்தன. தவளைகள் பயந்து கொண்டு தண்ணீரில் குதிப்பதைப் பார்த்து முயல்கள் தடைப்பட்டு நின்றன.


ஒரு முயல், “சகோதரர்களே! உயிரைவிட வேண்டியதில்லை. வாருங்கள் திரும்பிச் செல்வோம். பிரம்மாவின் படைப்பில் நம்மைவிடச் சிறிய, பயந்த ஜந்துக்களும் உயிருடனிருந்து வாழ்கின்றன. அப்படியிருக்க நாம் ஏன் வாழ்க்கையில் விரக்தி அடைய வேண்டும்?” என்றது.

அதன் வார்த்தையைக் கேட்டு முயல்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை விட்டுத் திரும்பிச் சென்றன. துன்பம் தரும் காலங்களில் அச்சம் தோன்றினால், உலகில் உன்னைவிட எத்தனை மக்கள் துயரத்தின் பிடியில் சிக்கித்தவிப்பவர்களாய் வாழ்கிறார்கள் என்பதை பார், நீ அவர்களைவிட எவ்வளவு நல்ல நிலையில் இருக்கிறாய் என்று உணர்ந்தால் உன்னைத் துயரங்கள் தொடராது.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. மன்னரும், தோட்டக்காரனும்

பாரசீகப் பேரரசரான நௌசேரவான் தனது நியாயம் தவறாத அருங்குணத்தால் மிகுந்த புகழ் பெற்றிருந்தார். அவர் மிகவும் கொடையாளியும் கூட. ஒரு நாள் அவர் தன் மந்திரியுடன் உலாவச் சென்றார். ஒரு தோட்டத்தில் மிகவும் வயதான ஒரு தோட்டக்காரன் மாமரக் கன்றை நட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பேரரசர் அத் தோட்டத்திற்குச் சென்றார். அவர் தோட்டக்காரனிடம் ''நீ இங்கே வேலைக்காரனா அல்லது இத்தோட்டத்தின் சொந்தக்காரனா?'' என்று வினவினார்.

தோட்டக்காரன் ''நான் வேலை செய்யவில்லை. இது என்னுடைய தகப்பனார், பாட்டனார் ஏற்படுத்தியது'' என்றான்.

பேரரசர் ''நீ இந்த மாமரக் கன்றை நடுகிறாயே, இதனுடைய பழங்களைச் சாப்பிட நீ உயிருடன் இருப்பாய் என்பதில் என்ன நிச்சயம்?''

மாமரம் நட்டால் பத்து வருடம் கழித்து தான் பலன் தரும். இவ்விஷயம் உலகறிந்தது. தோட்டக்காரக் கிழவன் பேரரசரின் வார்த்தையைக்கேட்டு ''நான் இதுவரை மற்றவர்கள் நட்ட மரங்களின் பழங்களை நிறையச் சாப்பிட்டு முடித்தேன். ஆகையால் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மற்றவருக்காக மரம் நடவேண்டும். தான் மட்டும் பழம் சாப்பிட வேண்டுமென்று எண்ணி மரம் நடுவது சுயநலம்'' என்றான்.

பேரரசர், தோட்டக்காரனின் பதிலால் மிகவும் சந்தோஷமடைந்தார். அவர் அவனுக்குப் பரிசாக இரண்டு பொன் நாணயங்களைக் கொடுத்தார்.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. உதவிக்கு கைம்மாறு

ஒரு மரக்கிளையில் புறா ஒன்று உட்கார்ந்திருந்தது. அம்மரம் நதிக்கரையிலிருந்தது. நதியில் ஒரு எறும்பு அடித்துச் செல்லப்படுவதைப் புறா மரக்கிளையில் அமர்ந்து கீழே பார்த்தபோது தெரிந்தது. அந்த உதவியற்ற எறும்பு, பாவம் அடிக்கடி கரையை நெருங்க விரும்பியும், நதியின் வெள்ளம் அதை மூழ்கடித்த வண்ணம் போய்க் கொண்டிருந்தது. சில வினாடிகளிலேயே எறும்பு நதியில் மூழ்கிவிடுமென்பது போல் தோன்றியது. புறாவிற்கு இரக்கம் வந்தது. அது அலகின் நுனியால் ஒரு இலையைக் கிள்ளி எறும்பின் பக்கத்தில் தண்ணீரில் போட்டது. எறும்பு அந்த இலையில் ஏறியது. இலை கரைப்பக்கம் மிதந்து வந்தது. தண்ணீரிலிருந்து வெளியே வந்த எறும்பு புறாவைப் புகழத்தொடங்கியது. அதே நேரம் வேடன் ஒருவன் அங்கு வந்தான். மரத்தின் கீழ் ஒளிந்து உட்கார்ந்து கொண்டான். புறா வேடனைப் பார்க்கவில்லை. வேட்டைக்காரன் தன்னுடைய மூங்கில் தடியால் புறாவைச் சிக்கவைக்க மேலே உயர்த்தத் தொடங்கினான். எறும்பு இதைப் பார்த்ததும் மரத்தை நோக்கி ஓடியது. அதற்குப் பேச முடிந்திருந்தால் அது கண்டிப்பாய் புறாவை எச்சரிக்கைப்படுத்தும். ஆனால் அதற்கோ பேசும் சக்தியில்லை. தன் உயிரைக் காப்பாற்றிய புறாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி காப்பாற்றலாம் என்று அது யோசிக்கத் தொடங்கியது. மரத்தின் கீழே சென்று வேடனின் காலில் ஏறியது. அது தன் முழுபலத்துடன் அவனுடைய தொடையில் பலமாகக் கடித்தது.


எறும்பு கடித்ததால் வேடன் திடுக்கிட்டான். அவன் கை நடுங்கியது. அதனால் மரத்தின் இலைகள் அசைந்தன. புறா எச்சரிக்கையடைந்து பறந்து விட்டது.

யார் துன்பத்திலுள்ளவர்களுக்கு உதவி செய்கிறாரோ, அவர் துன்புறும் நேரத்தில் பகவான் உதவிக்கு கண்டிப்பாக ஏற்பாடு செய்கிறார்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. விருந்தோம்பும் பண்பு

இக்கதை புராணத்தில் உள்ளது. பறவைகளைப் பிடித்து விற்கும் வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் நாள் முழுவதும் தன்னுடைய வலையையும், தடியையும் எடுத்துக் கொண்டு காட்டிற்கு சுற்றிப், பறவைகளைப் பிடித்து வந்தான். ஒரு தடவை குளிர்காலத்தில் அதிகாலையில் வேட்டைக்காரன் காட்டிற்குச் சென்றான். அன்று ஒரு பறவைகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. ஒரு காட்டிலிருந்து இன்னொரு காடு என்று சுற்றவே நாள் முழுவதும் கழிந்துவிட்டது. அவன் வீடு திரும்ப நேரம் சென்றுவிட்டது. அதனால் இரவைக் கழிக்க ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்தான். அன்று நல்ல மழை. இப்பொழுது ஆலங்கட்டி மழையும் பெய்து கொண்டிருந்தது. அதனால் குளிர் மிகவும் அதிகரித்தது. வேட்டைக்காரனிடத்தில் துணிவு இல்லை. அவன் இரவில் காட்டிலேயே தங்க நேரிடும் என எதிர்பார்க்கவில்லை. குளிரினால் அவன் பற்கள் படபடவென அடித்துக் கொள்ளத் தொடங்கின.

அவன் அமர்ந்திருந்த மரத்தில் ஒரு சோடிப்புறாக்கள் கூடு கட்டி வசித்து வந்தன. வேட்டைக்காரனின் கஷ்டநிலமையைப் பார்த்து ஆண் புறா தன் மனைவியிடம் ‘‘நம்மவர்களுக்கு இவன் எதிரியாயிருந்தும் கூட இன்று நம்முடைய விருந்தாளியாக இருக்கிறான். இவனை உபசரிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் கடமை. இப்போது தான் இரவு வரத் தொடங்கியுள்ளது. பனி இன்னும் அதிகமாகும். இவன் இப்படியே இரவு முழுவதும் இருக்கும்படி நேர்ந்தால் குளிரினால் இறந்துவிடுவான். நமக்கு இவன் இறந்ததன் பாவம் உண்டாகும். இவனுடைய குளிரை நீக்க வழி செய்ய வேண்டும்'' என்று கூறியது.

ஆண் புறாவும், பெண் புறாவும் தங்களுடைய கூட்டைக் கீழே விழச் செய்தன. மேலும் உலர்ந்த புற்களை அலகினால் கொத்திக் கொத்தி கொணர்ந்து சேர்த்தன. மறுபடியும் பெண்புறா பறந்து சென்று தூரத்தில் எரிந்து கொண்டிருந்த ஒரு விறகை மூக்கால் பிடித்து எடுத்து வந்தது. அதை புற்களின் மேல் அது போட்டது. புற்கள் எரியத் தொடங்கின. வேட்டைக்காரன் அக்கம் பக்கத்திலிருந்து பொறுக்கிய விறகுகளை நெருப்பில் போட்டான். அவன் குளிர் நீங்கியது.

வேட்டைக்காரன் நாள் முழுவதும் பட்டினியால் களைத்திருந்தான். இப்போது அவன் நெருப்பின் வெளிச்சத்தில் எங்காவது ஏதாவது கிடைத்தால் சாப்பிட்டு பசியாறலாமென்று இங்குமங்கும் பார்க்கத் தொடங்கினான். பெண்புறா இதைப் பார்த்ததும் ஆண் புறாவிடம் சொன்னது, ''விருந்தாளி நிச்சயமாகப் பகவானுக்குச் சமமானவன். யாருடைய வீட்டிலிருந்து விருந்தாளி பசியுடன் செல்கிறானோ, அவனுடைய எல்லாப் புண்ணியங்களும் மறைந்துவிடுகின்றன. இந்த வேட்டைக்காரன் இன்று நம் விருந்தாளியாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியுடனுமிருக்கிறான். இவனுடைய பசியைப் போக்க நம்மிடம் ஒன்றுமேயில்லை. நான் இந்த எரியும் நெருப்பில் குதிக்கிறேன். அதனால் என் மாமிசத்தைச் சாப்பிட்டு இவன் வயிற்றை நிரப்பட்டும்.''

இப்படிச் சொல்லிவிட்டுப் பெண்புறா மரத்திலிருந்து நெருப்பில் குதித்து விட்டது. ஆண்புறா மனதில் சொல்லிக்கொண்டது ''இந்த விருந்தாளியின் வயிறு பெண்புறாவின் சிறிதளவு மாமிசத்தால் எப்படி நிறையும்? நானும் நெருப்பில் குதித்து என் மாமிசத்தையும் இவனுக்குத் தருவேன்'' என்று சொல்லிக் கொண்டு தானும் நெருப்பில் குதித்துவிட்டது.


அதே நேரம் வானத்தில் வாத்தியங்கள் வாசிக்கத் தொடங்கின. பூக்கள் மழைபோல் பொழியத் தொடங்கின. தேவதைகளின் விமானம் வந்தது. தேவதைகளைப் போன்ற உருவத்துடன் ஆண்புறாவும், பெண்புறாவும் அதில் ஏறி உட்கார்ந்து அரசர்களுக்கும், இருடிகள், முனிவர்களுக்கும் கிடைத்தற்கரியதான தேவலோகம் சென்றடைந்தன.

**''செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு'' - திருக்குறள்**

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. குடியானவனும் நாரையும்

ஒரு குடியானவனுக்குப் பறவைகளால் தொல்லை ஏற்பட்டது. அவனுடைய வயல், காட்டிற்குப் பக்கத்திலிருந்தது. அக்காட்டில் பறவைகள் அதிகமிருந்தன. குடியானவன் வயலில் விதைகளை விதைத்து விட்டு, படலையைச் சாத்தி வீடு திரும்பியவுடனேயே பறவைகள் கூட்டம் கூட்டமாய் அவனுடைய வயலில் வந்து உட்கார்ந்து, மண்ணைக் கிளறி விதைக்கப்பட்ட விதைகளைத் தின்னத் தொடங்கிவிடும். குடியானவன் பறவைகளைத் துரத்தித் துரத்தி களைத்து விட்டான். அநேகமாக எல்லா விதைகளையும் பறவைகள் தின்று விட்டன. பாவம் அவனுக்கு மறுபடியும் வயலை உழுது வேறு விதைகளை விதைக்கும்படி நேர்ந்தது. இந்தத் தடவை குடியானவன் ஒரு மிகப்பெரிய வலை கொண்டு வந்தான். அவன் வயல் முழுவதும் வலையை விரித்தான். நிறையப் பறவைகள் வயலில் விதையைக் கொத்த வந்தன; வலையில் சிக்கிக் கொண்டன. ஒரு நாரையும் அந்த வலையில் சிக்கிக் கொண்டது. குடியானவன் வலையிலகப்பட்ட பறவைகளைப் பிடிக்கத் தொடங்கியவுடன் நாரை வேடனிடம் ''நீங்கள் என் பேரில் கருணை காட்டுங்கள். நான் உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை. நான் கோழியோ, கொக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விதைகளைத் தின்னும் பறவையோ இல்லை. நான் நாரை. வயல்களுக்குத் தீங்கு விளைவிக்கும் புழுக்களை மட்டும் சாப்பிடுவேன். என்னை விட்டுவிடுங்கள்'' என்று கூறியது.

குடியானவனுக்கு தாங்க முடியாத கோபம் வந்தது. அவன் ''நீ சொல்வது சரி. ஆனால் இன்று நீ பறவைகளுடன் பிடிக்கப்பட்டிருக்கிறாய். எனது விதைகளைத் தின்ற பறவைகளின் தோழன் தானே நீயும், நீ இவைகளுடன் வந்ததால் இவைகளுடன் தண்டனையும் அனுபவி'' என்றான்.

ஒருவன் சார்ந்துள்ள மனிதர்களைக் கொண்டே அவனையும் மதிப்பிடுகின்றனர். கெட்டவர்களுடன் வசிப்பதால் கெடுதல் செய்தவர்களுக்கும் தண்டனையும், கெட்ட பெயரும் கிடைக்கின்றது. அதனால் தொல்லை தந்த பறவைகளுடன் நாரையும் பிடிபட நேர்ந்தது.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. கொக்கு கூறிய நீதி

ஒரு கிராமத்தின் பக்கத்தில் உள்ள வயலில் ஒரு சோடி கொக்குகள் வசித்து வந்தன. அங்கேயே அவைகளின் முட்டைகள் பெரிதாகி, பின்னர் அவைகளிலிருந்து குஞ்சுகள் வந்தன. ஆனால் குஞ்சுகளுக்கு இறக்கை முளைத்துப் பறக்கத் தக்க காலம் வரும் முன்பே பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராகிவிட்டது. கொக்கு கவலையில் ஆழ்ந்தது. குடியானவன் வயல் அறுவடைக்கு வருவான். அதற்கு முன்பே குஞ்சுகளுடன் அது அங்கிருந்து சென்று விட வேண்டும். மேலும் குஞ்சுகளால் பறக்க முடியவில்லை. கொக்கு குஞ்சுகளிடம் நாங்கள் இல்லாதபோது யாராவது வயலுக்கு வந்து ஏதாவது பேசினால் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியது.

ஒரு நாள் கொக்கு இரை எடுத்துக்கொண்டு மாலையில் குஞ்சுகளிடம் வந்தது. அப்போது குஞ்சுகள் கூறின, ‘‘இன்று குடியானவன் வந்தான். அவன் வயலின் நாற்புறமும் சுற்றி வந்தான். ஓரிரு இடங்களில் நின்று கொண்டு வெகுநேரம் உற்றுப் பார்த்தான். பின்னர் வயல் அறுவடை செய்யும் நிலையிலுள்ளது. நான் கிராம மக்களிடம் சென்று என்னுடைய வயலை அறுவடை செய்து கொடுங்கள் என்று சொல்வேன்’’ என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கு "நீங்கள் பயப்படாதீர்கள். வயல் இப்போது அறுவடை செய்யப்பட மாட்டாது. இன்னும் வயல் அறுவடை செய்யப் பல நாட்கள் உள்ளன." பல நாட்களுக்குப் பிறகு கொக்கு குஞ்சுகளிடம் வந்த போது குஞ்சுகள் பயப்பட்டன. அவை நாம் இந்த வயலை விட்டு உடனடியாகப் போக வேண்டும். இன்று குடியானவன் மறுபடியும் வந்தான். "கிராம மக்கள் தன்னலம் படைத்தவர்கள். அவர்கள் என் வயலை அறுவடை செய்ய எவ்வித ஏற்பாடுகளும் செய்யவில்லை. நாளை நான் என் உடன்பிறந்தாரை அனுப்பி வயலை அறுவடை செய்வேன்" என்றான்.

கொக்கு கவலையில்லாமல் உட்கார்ந்து கூறிற்று இப்போதும் வயல் அறுவடை செய்யப்படமாட்டாது. இரண்டு, மூன்று நாட்களில் நீங்கள் நன்றாய்ப் பறக்க முடியும். பயப்படத் தேவையில்லை என்றது.

சில நாட்கள் மேலும் கழிந்தன. கொக்குக் குஞ்சுகள் பறக்கத் தொடங்கின. பயமில்லாமல் இருந்தன. ஒரு நாள் மாலை குஞ்சுகள் கொக்கிடம் சொல்லத் தொடங்கின. இக்குடியானவன் நம்மைப் பொய்யாகப் பயமுறுத்துகிறான். அவன் வயல் அறுக்கப்பட மாட்டாது. அவன் இன்று கூட என் சகோதரர்கள் என் பேச்சைக் கேட்கவில்லை. அனைவரும் சாக்குப் போக்குச் சொல்கிறார்கள். என் வயலின் தானியங்கள் காய்ந்து உதிர்கின்றன. நாளை அதிகாலையில் வருவேன். நானே வயலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடை செய்வேன். இதைக்கேட்ட கொக்கு பயந்து கொண்டு சொன்னது ''வெளியேறுங்கள் சீக்கிரம், இன்னமும் இருட்டவில்லை. வேறிடத்திற்குப் பறந்து செல்லுங்கள். நாளைக்குக் கட்டாயம் வயல் அறுவடை செய்யப்படும். குஞ்சுகள் இந்தத் தடவை வயல் அறுவடை செய்யப்படுமா? எப்படி?'' என்று கேட்டன.

கொக்கு கூறியது ''எப்போது கிராமத்து மக்களிடமும், தன் உடன்பிறந்தார்களிடமும் நம்பி வேலையை யார் விடுகிறாரோ அவர்களது வேலை நடக்காது. அதனால் தானே வேலை செய்ய முடிவு எடுத்தால் அவன் வேலை தடைப்படாது. குடியானவன் தானே நாளை அறுவடை செய்யப் போகிறான். ஆகையால் வயல் கட்டாயம் அறுவடையாகிவிடும்'' என்று சொல்லித் தன் குஞ்சுகளுடன் கொக்கு அதே நேரம் அங்கிருந்து பறந்து வேறிடத்திற்குச் சென்றது.

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. நன்றிக்கடன்

ஒரு முறை ஒரு சிங்கத்தின் காலில் தடித்த பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. சிங்கம் பல்லால் பலமுறை இழுத்தும் முள் வெளிவரவில்லை. அது நொண்டிக் கொண்டே ஒரு ஆட்டிடையனிடம் சென்றது. தன்னை நோக்கிச் சிங்கம் வருவதைப் பார்த்து ஆட்டிடையன் மிகவும் பயப்பட்டான். ஓடுவதால் சிங்கம் இரண்டு எட்டில் தன்னைப்பிடித்து விடுமென்று அவன் அறிவான். ஆட்டிடையன் ஏதாவது ஒரு மரத்தில் ஏறலாமென்றால் பக்கத்தில் ஒரு மரம்கூட இல்லை. வேறு வழி தோன்றாமல் ஆட்டிடையன் அங்கேயே பேசாமல் உட்கார்ந்து விட்டான். சிங்கம் கர்ச்சிக்கவுமில்லை. உறுமவுமில்லை. அது ஆட்டிடையன் முன்னால் வந்து உட்கார்ந்து. தன்னுடைய காலை அவன் முன் நீட்டியது. சிங்கம் தன் உதவியை விரும்புவதை ஆட்டிடையன் அறிந்து கொண்டான். அவன் சிங்கத்தின் பாதத்திலிருந்து முள்ளை எடுத்தான். சிங்கம் வந்த வழியே காட்டை நோக்கிச் சென்று விட்டது.

சில நாட்கழித்து அந்நாட்டு அரசனின் அரண்மனையில் திருட்டு நடந்தது. ஆட்டிடை யனுடைய அதிகாரிகள் அவன்தான் திருடனென்று அரசனிடம் பொய்யுரைத்தனர். ஆட்டிடையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பட்டான். அவன் வீட்டில் திருடப்பட்ட பொருட்கள் எதுவுமில்லை. அவன் திருடின பொருட்களை மறைத்து வைத்துள்ளான் என்று அரசர் நினைத்தார். அதனால் ஆட்டிடையனை உயிருள்ள சிங்கத்தின் முன்னே விடக்கட்டளையிட்டார்.

சந்தர்ப்ப வசத்தால் ஆட்டிடையனைக் கொல்ல அதே சிங்கம் வருவிக்கப்பட்டது. என் காலிலிருந்து முள்ளை ஆட்டிடையன் எடுத்து விட்டானோ, அந்த சிங்கத்தின் எதிரில் விட்டதும், சிங்கம் அவனை அறிந்து கொண்டது. அது ஆட்டிடையனின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, நாயைப்போல் வாலை ஆட்டத் தொடங்கியது. ராஜாவிற்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. முள்ளை அகற்றி உதவியதால் தான். அவனுக்குச் சிங்கம் நன்றியுணர்வைத் தெரிவிக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட அரசன் ஆட்டிடையனை விடுதலை செய்தான்.

பயங்கரமான சிங்கம் போன்ற விலங்குகள் கூட தனக்கு உதவியவர்களை மறப்பதில்லை. எந்த மனிதர் பிறர் செய்த உதவியை மறந்து விடுகிறாரோ, அவர்கள் விலங்குகளைவிட மிக இழிந்தவர்கள்.


**''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது''**

**- திருக்குறள்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. பேராசை பிடித்த குரங்கு

தினந்தோறும் ஒரு வீட்டிற்கு குரங்கு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதிக தொல்லையும் கொடுத்தது. அது எப்போதும் துணியைக் கிழிப்பது, பாத்திரத்தை எடுத்துப் போவது, குழந்தைகளை விறாண்டி விடுவது என்று பல சேட்டைகளை செய்து வந்தது. அது உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றது என்பதற்குக் கூட வீட்டுக்காரர்கள் வருத்தப்படவில்லை. ஆனால் அக்குரங்கின் ஏனைய தொல்லைகளால் அவர்கள் துன்பப்பட்டார்கள்.

ஒரு நாள் வீட்டு எசமானன் ''நான் இந்தக் குரங்கை வெளியேற்ற ஒரு வழி செய்வேன்'' என்று கூறி அவன் ஒரு சிறிய வாயுள்ள குடத்தை வாங்கி அதில் வறுத்தகடலையைப் போட்டுக் குடத்தை பூமியில் புதைத்தான். குடத்தின் வாய் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தது. அனைவரும் அங்கிருந்து அகன்று விட்டனர். அக்குரங்கு வீட்டிற்குள் வந்தது. சிறிது நேரம் இங்குமங்கும் அலைந்தது.

குடத்தினுள்ளே கடலையைப் பார்த்ததும் அந்தக் குடத்தின் பக்கம் வந்து அமர்ந்தது. கடலையை எடுப்பதற்காக குடத்தில் கையை விட்டது. கை முஷ்டி வரை கொண்டு சென்றது. குடத்தின் வாய் சிறியது. அதில் சிக்கிய முஷ்டி வெளிவர முடியவில்லை. குரங்கு முஷ்டியை எடுக்கப் பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முழுவதையும் உபயோகித்து குதிக்கத் தொடங்கி கத்தியது; புரண்டது. ஆனால் பேராசையால் கையிலுள்ள கடலையை விடவில்லை. குரங்கை வீட்டு எசமானன் கயிற்றாற் கட்டினான். வெளியே விட்டு விட்டான். கடலையின் பேராசையால் குரங்கு பிடிக்கப்பட்டது.

**பேராசை பெருநட்டம்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. பேராசை பிடித்த நாய்

ஒரு நாய் வாயில் ரொட்டித் துண்டைக்கவ்விக் கொண்டு எங்கோ சென்று கொண்டிருந்தது. வழியில் தேங்கியிருந்த நீரைக் கடந்து செல்ல நேர்ந்தது. தண்ணீர் அதிக ஆழமில்லை. நாய் நீரில் தன் நிழலைப் பார்க்க நேரிட்டது.

''தண்ணீரில் மற்றொரு நாய் ரொட்டியை எடுத்துக்கொண்டு சென்று கொண்டிருக்கிறது. நான் அதன் ரொட்டியைப் பிடுங்கி கொண்டால் எனக்கு முழு ரொட்டி கிடைத்துவிடும்'' என்று எண்ணியது.

நாய், நிழல் நாயின் ரொட்டியைப் பிடுங்கிக் கொள்ள வாயைத் திறந்ததுமே அதன் வாயிலிருந்த ரொட்டி தண்ணீரில் விழுந்துவிட்டது. அது முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டது. முழுவதுக்கும் ஆசைப்பட்டு, இருந்த பாதித்துண்டும் வீணாயிற்று.

**போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து**

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. பூனைகளும், குரங்கும்

ஒரு கிராமத்தில் இரண்டு பூனைகள் வசித்து வந்தன. அவைகள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் வசித்து வந்தன. அவைகளுக்கு எது கிடைத்தாலும் தமக்குள் பகிர்ந்து கொண்டு சாப்பிட்டு வந்தன. ஒரு நாள் அவைகளுக்கு ஒரு ரொட்டி கிடைத்தது. அதைச் சரி சமமாகப் பங்கிடுவதில் அவைகளுக்குள் சண்டை வந்து விட்டது. ஒன்று சொல்லிற்று ''என் பங்கைவிட உன்னுடையது பெரியது'' என்று. மற்றையது ''உன் பங்கைவிட என்னுடையது பெரியது அல்ல'' என்று சொல்லிற்று.

தங்களுக்குள் சரியாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாமற் போகவே, அவை இரண்டும் ஒரு குரங்கிடம் சென்றன. அவை குரங்கைத் தமது நீதிபதியாக ஆக்கின. குரங்கு ஒரு தராசை வரவழைத்து ரொட்டியின் இரு துண்டுகளையும் ஒவ்வொரு தட்டில் ஒவ்வொன்றாக வைத்தது. தராசின் எப்பக்கம் சாய்ந்ததோ அப்பக்கத்துண்டை எடுத்து வாயில் வைத்துக் கடித்தது. இப்போது தராசின் மறுபக்கம் சாய்ந்தது. அப்பக்கத்துண்டை எடுத்து மறுபடியும் குரங்கு வாயில் வைத்துக் கடித்தது. அப்படி அடிக்கடி இரண்டு ரொட்டித் துண்டுகளிலிருந்தும் சிறிது சிறிதாக சாப்பிடத் தொடங்கியது. குரங்கு கொஞ்சம் கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொட்டித்துண்டுகளைச் சாப்பிடவே துண்டுகள் மிகச் சிறியதாக ஆகிவிட்டன. இதைக் கண்ட பூனைகள் பயந்து விட்டன.

அவை குரங்கிடம், ''நீங்கள் இனிச் சிரமப்பட வேண்டாம். நாங்களே எங்களுக்குள் பிரித்துக் கொள்கிறோம்'' என்றன.

குரங்கு கூறியது ''நான் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறேன். எனக்கு அதற்கு சிறிது கூலி வேண்டாமா'' என்று சொல்லி மீதியாயிருந்த இரண்டு ரொட்டித் துண்டுகளையும் வாயில் நிரப்பி உர்உர் என்று உறுமிப் பூனைகளை துரத்திவிட்டது.

இரு பூனைகளும் மிகவும் மனம் வருந்தி, நமக்குள் தோன்றிய மனவேற்றுமையே இதற்குக் காரணம் என்று கூறிக் கொண்டன.

**ஒன்று பட்டாலுண்டு வாழ்வு**

*** *** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. சண்டை சிங்கத்துக்கும், சிறுத்தைக்கும் : லாபம் நரிக்கு

ஒரு காட்டில் ஒரு சிங்கமும், சிறுத்தையும் வசித்து வந்தன. சிங்கம் பலசாலியானாலும், அதற்கு வயதாகிவிட்டது. அதன் ஓட்டம் குறைந்து போயிருந்தது. சிறுத்தை பருத்தும், பலசாலி யாகவுமிருந்தது. இருந்தபோதிலும் கிழச் சிங்கத்திடம் சிறுத்தை பயந்தது. அதனிடம் நட்பு வைத்துக் கொண்டது. காரணம் கிழசிங்கம் சிறுத்தையை விட அதிகம் பலமுள்ளது தான்.

ஒரு தடவை அநேக தினங்கள் வரை சிங்கத்திற்கோ, சிறுத்தைக்கோ எதற்கும் எவ்வித இரையும் கிடைக்கவில்லை. இரண்டும் மிகவும் பசியோடிருந்தன. ஒரு சிறிய மான்குட்டி பக்கத்தில் மேய்ந்து கொண்டிருப்பதை இரண்டும் பார்த்தன. சிறுத்தை சிங்கத்திடம் ''நான் மானைப் பிடிக்கிறேன். ஆனால் நீங்கள் அந்த ஓடையின் அருகில் உட்கார்ந்து கொள்ளுங்கள். அதனால் மான் ஓடையின் வழியாக ஓடித்தப்பிக்க முடியாது'' என்று சொல்லியது.

சிங்கம் ஓடையின் அருகில் உட்கார்ந்து கொண் டது. சிறுத்தை ஓடி மானைப் பிடித்து கொன்றுவிட்டது. ஆனால் மான் மிகச் சிறியது. இரண்டில் ஒன்றுக்குக் கூட அதைத் தின்று முழுவதும் பசியாற முடியாது. ஆகவே இரண்டும் பசியுடனிருந்தன. ஆகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர் மனதிலும் பேராசை வந்தது. சிறுத்தை மானை நான் தனியாகக் கொன்றேன். அதனால் நான்தான் சாப்பிடுவேன் என்றது.

சிங்கம் ''நான் காட்டின் அரசன். மானை நான் சாப்பிடுவேன். உன்னால் ஓட முடியும். நீ வேறு ஒன்றைப் பிடித்துக் கொள்'' என்றது. இரண்டிற்கும் சண்டை வலுத்தது. இரண்டும் தங்களுக்குள் பற்களாலும், நகங்களாலும் சண்டையிட்டுக் கொள்ளத் தொடங்கின. புதரில் மறைந்திருந்த ஒரு நரி இதனைப் பார்த்துக் கொண்டிருந்தது. சிங்கமும், சிறுத்தையும் ஒன்றோடொன்று கட்டிப் புரண்டு கொண்டு பற்களாலும், நகங்களாலும் காயப்படுத்திக் கொண்டு சண்டை செய்யும் போது நரி புதரிலிருந்து வெளியே வந்தது. மானை அது இழுத்துக்கொண்டு புதருக்குள் சென்று சாப்பிடத் தொடங்கியது. சிங்கமோ, சிறுத்தையோ எதுவும் எழுந்திருக்க முடியவில்லை. அவைகள் பார்த்துக் கொண்டேயிருந்தன.

ஒரு பொருளுக்கு இருவர் சண்டையிடத் தொடங்கினால் இருவருக்கும் நஷ்டம் தான் ஏற்படும். யாரோ ஒரு மூன்றாமவன் இலாபமடைகிறான். ஆகவே நாம் சண்டையிடக் கூடாது. ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

**ஒற்றுமையே பலம்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. ஆமையும் முயலும்

நீங்கள் முயலைப் பார்த்திருக்கலாம். முயல்கள் பழுப்பு, வெள்ளை நிறங்களில் காணப்படுகின்றன. மற்றும் பல நிறங்களிலும் முயல்கள் காணப் படுகின்றன. சிலர் அதை வளர்க்கின்றனர். முயல் மிகச் சிறிய மிருகமானாலும் ஓடுவதில் வேகமதிகம்.

ஒரு முறை ஒரு முயல் கர்வமாய் உளறியது. நான் மிக நன்றாகக் குதித்து ஓடுவேன். என்னைப் போல வேகத்துடன் உலகில் யாருமே ஓடமுடியாது. அங்கேயே ஒரு ஆமை இருந்தது. ஆமை சொன்னது, ''தம்பி! நீ மிக வேகமாக ஓடுகிறாய். இது உண்மையான, சரியான வார்த்தை. ஆனால் யாரும் கர்வப்படக் கூடாது. கர்வப்படுவதில் வெட்கப்பட வேண்டும்.''

முயல் கூறியது, ''நான் என் பெருமையைப் பொய்யாகச் சொல்லவில்லையே. தன் உண்மையான குணத்தைச் சொல்வதில் எப்படித் தீங்கு வரும்? நீ ஊர்ந்து செல்லும் புழுப்போல் நடந்து செல்கிறாய். அதனால் என் குணத்தைக் கேட்டதும் உனக்கு பொறாமை வருகிறது.''

முயல், ஆமையை மென்மேலும் சீண்டத் தொடங்கியதும், ஆமை ''தங்களுக்கு உங்கள் நடையில் அவ்வளவு கர்வமிருப்பின், வாருங்கள் எனக்கும், உங்களுக்கும் ஓட்டப்பந்தயம் வைப்போம். பார்ப்போம் யார் வெற்றியடைகிறாரென்று!'' கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல் வெகு தொலைவில் ஒரு மரத்தைக் காட்டி ‘‘நல்லது! வா, யார் அந்த மரத்தடிக்கு முதலில் செல்கிறாரோ, அவரே வெற்றியடைந்தவர் என ஒப்புக் கொள்ள வேண்டும்’’ என்றது.

‘‘பாவம், ஆமை ஊர்ந்து கொண்டு செல்லும். அது மரத்திலிருந்து நான்கு முழதூரத்திலிருக்கும் போது நான் இங்கிருந்து செல்வேன். இருந்த போதிலும் நான் குதித்துக் குதித்து அதற்கு முன்னால் சென்று விடுவேன்’’ என்று முயல் எண்ணியது. அது ஆமையிடம் சொன்னது ‘‘நீ சோம்பேறி சுறுசுறுப்பில்லாதவன், மெதுவாகப் போவாய். இப்போதே புறப்படு. நான் சிறிது நேரத்தில் வருகிறேன்.’’

ஆமை பேசியது, ‘‘ஓட்டம் இப்போதே தொடங்கியதாக ஒப்புக்கொள்ள வேண்டும் உங்களுக்குப் பிரியப்பட்ட சமயத்தில் புறப்படுங்கள்’’ என்று சொல்லியது.

முயல் ஆமையின் பேச்சை ஒத்துக் கொண்டது. ஆமை மெல்ல மெல்ல நகர்ந்து செல்லத் தொடங்கியது. முயல் எண்ணியது ‘‘இதுவோ அதிக நேரம் சென்று தான் மரத்தை அடையும், அதுவரை நான் இளைப்பாறுவேன்.’’ அது அங்கேயே படுத்து தூங்கிவிட்டது. தூக்கம் வந்தவுடன் எவ்வளவு நேரம் பிடித்தது தூங்குவதற்கு என்று அது அறியவில்லை. தூக்கம் கலைந்து ஓடிச்சென்று மரத்தையடைந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமை அங்கு முன்பே வந்திருப்பதைப் பார்த்த முயல் வெட்கப்பட்டது. கர்வம் கொள்வதால் தீமை ஏற்படுகின்றதென்று அது ஒத்துக் கொண்டது.

கர்வம் கொள்பவரின் தலை குனியும், கர்வம் கொள்பவர், வேலையைத் தட்டிக் கழிப்பவர் எப்போதும் தோல்வியையும், அவமானத்தையும் அடைகின்றனர்.

வெற்றியும், சன்மானமும் தைரியத்துடன் பணி யாற்றுபவருக்கே கிடைக்கிறது.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. நாயின் தவறு

ஒரு நாய்க்குப் பறவைகளின் முட்டையைச் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அது வயல் வரம்புகளிலும், நதிக்கரை ஓரங்களிலும் திரிந்து வந்தது. மேலும் நீர்ப்பறவைகளின் முட்டைகளையும் சாப்பிட்டு வந்தது. நதிக்கரையின் ஓரத்தில் ஆமை முட்டைகளை அது தேடித் திரிந்தது.

ஒரு நாள் மணலில் இருந்த ஒரு நத்தைக்கூட்டை நாய் பார்த்தது. அதையும் ஏதோ ஒரு முட்டை என்று நினைத்து விழுங்கிவிட்டது. நத்தைக்கூட்டின் ஓட்டின் பகுதிகள் நாய் வயிற்றினுள் சென்று குடலில் குத்தத் தொடங்கின. அது வலியால் துடிக்கத் தொடங்கியது. அப்போது அது அழுது கொண்டு சொல்லத் தொடங்கிற்று "என்னால் பெரிய தவறு நேர்ந்துவிட்டது. உருண்டையான எல்லாப் பொருட்களும் முட்டையில்லை என்று இப்போது தான் தெரிந்து கொண்டேன்."

சிறுவர்கள் அறியாமல் எல்லாப் பொருட்களையும் வாயில் போட்டுக் கொண்டால், அவர்களுக்கு இவ்வாறே துன்பம் ஏற்படுகின்றது. ஆகையால் எந்தப் பொருளையும் சாப்பிடக் கூடியது தானா அல்லது கூடாததா என்று அறிந்து கொள்ளாதவரை அதை வாயிற் போடாதீர்கள்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING
ARASADY PUBLIC LIBRARY





Class No:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARASADY PUBL

# 32. உண்மையான மான்கள்

புராணத்தில் ஒரு அழகான கதை வருகிறது. ஒரு காட்டில் ஒரு குளம் இருந்தது. அக்காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தண்ணீர் குடிக்க அந்தக் குளத்திற்கு வருவது வழக்கம். ஒரு நாள் ஒரு வேடன் மிகவும் களைத்தும், பல தினங்களாக பசியோடுமிருந்தான். அவன் நினைத்தான் ''காட்டு விலங்குகள் தண்ணீர் குடிக்கக் கண்டிப்பாய் இக்குளத்திற்கு வரும். இங்கே எனக்கு மிக எளிதாக வேட்டை கிடைத்துவிடும்.'' இவ்வாறு நினைத்துக் குளத்தினருகில் ஒரு வில்வ மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

ஒரு பெண் மான் சிறிது நேரத்தில் குளத்தில் நீர் பருக வந்தது. வேடன் மானைக் கொல்ல அம்பு தொடுத்தான். வேடன் அம்பு தொடுப்பதை மான் பார்த்து விட்டது. அது சொன்னது ''நான் ஓடிப் போய் உன் அம்பிலிருந்து தப்ப முடியாதென்றறிவேன். ஆனாலும் நீ என்னிடம் இரக்கம் காட்டு. என்னுடைய இரண்டு குட்டிகள் என் வரவை எதிர்பார்த்திருக்கும். நீ எனக்குச் சிறிது நேரம் அவகாசம் கொடு. என் குட்டிகளுக்குப் பால் கொடுத்து அவைகளை என் தோழியிடம் ஒப்படைத்துவிட்டு உன்னிடம் திரும்பி வருவேனென்று உனக்கு நான் வாக்குத் தருகிறேன்'' என்று சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடன் சிரித்தான். மான் உயிரைவிட மறுபடி அவனிடம் திரும்ப வரும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. ஆனால் அவன் உயிரை விட மனமில்லாத இம்மானை விட்டுவிடலாம். ‘‘எனக்கு அதிஷ்டமிருந்தால் மற்றொரு வேட்டை கிடைக்கும்’’ என்று மானைப் போகவிட்டான்.

சிறிது நேரத்தில் பெரிய கொம்புள்ள அழகிய கறுப்பான ஆண் மான் தண்ணீர் குடிக்க வந்தது. வேடன் அதைக் கொல்ல வில்லில் அம்பு தொடுத்தும் மான் பார்த்துவிட்டு ‘‘சகோதரவேடனே! என் மனைவி, குழந்தைகள் என்னைப் பிரிந்து வெகு நேரமாகிவிட்டது. அவை எல்லாம் நடுங்கிக் கொண்டிருக்கும். நான் அவைகளைச் சந்தித்து, அவர்களுக்கு அறிவுறுத்திவிட்டு, உன்னிடத்திற்கு கண்டிப்பாய் வருவேன். இப்போது கருணை காட்டி என்னைப் போகவிடு’’ என்றது.

வேடன் மிகவும் மனம் ஒடிந்து போனான். அவனுக்கு மிகவும் பசி எடுத்தது. ஆனால் அவன் ‘‘என்தலை விதிப்படி இன்று முழுவதும் பசியுடனே இருக்க வேண்டும் என்றால் அப்படியே இருப்பேன்’’ என்று யோசித்து மானைப் போக விட்டுவிட்டான்.

பெண் மான் தன் குட்டிகளிடம் சென்றது. அது குட்டிகளுக்குப் பால் கொடுத்துச் சீராட்டியது. பின் தன் தோழி மானிடம் எல்லா விடயங்களையும் கூறித் தன் குட்டிகளை ஒப்படைக்க விரும்பிற்று. இதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அந்த ஆண் மானும் வந்தது. அதுவும் குட்டிகளைக் கொஞ்சியது. குட்டிகள் தங்கள் தாய் - தந்தையரை விட்டுத் தனித்திருக்க தயாராக இல்லை. கடைசியில் அவைகளின் பிடிவாதத்தைத் தட்ட முடியவில்லை. ஆண் மானும், பெண் மானும் அவைகளையும் உடனழைத்துச் சென்றன.

குளத்தருகில் வந்து பெண் மான் வேடனிடம் சொன்னது ''சகோதர வேடனே! இப்போது நாங்களனைவரும் வந்துவிட்டோம். நீ எங்களை உன் அம்பால் கொல். எங்கள் இறைச்சியால் உன் பசியைப் போக்கிக் கொள்'' என்றது.

ஆண் மான், பெண் மான் இரண்டினதும் உண்மையான நடத்தையைப் பார்த்து வேடன் வியப்படைந்தான். அவன் மரத்திலிருந்து இறங்கி ''பாருங்கள்! இந்த மான் விலங்காயிருந்தும் கூடத் தன் வார்த்தையில் எவ்வளவு உண்மையோடிருக்கிறது? இவைகள் உயிர் மீதுள்ள ஆசையைவிட்டுச் சத்தியத்தைக் காப்பாற்ற என்னிடத்தில் வந்துள்ளன. மனிதனாயிருந்தும் கூட நான் எவ்வளவு பாவி. என் வயிற்றை நிரப்பவும். சிறிது காசு சம்பாதிக்கவும் குற்றமற்ற விலங்குகளைக் கொல்கிறேன். இன்றிலிருந்து நான் எந்த விலங்கையும் கொல்ல மாட்டேன்'' என்று சபதஞ் செய்தான்.

தன் வில்லை ஒடித்துத் தூர எறிந்தான். அதே சமயம் அங்கு தேவலோகத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விமானம் இறங்கியது. அதைக் கொண்டு வந்த தேவதூதன் ''வேடனே! இந்த மான்கள் சத்தியத்தைக் காத்ததினால் பாவமற்றவைகளாயின. இவைகளெல்லாம் இப்போது தேவலோகம் போக வேண்டும். நீயும் கூட இன்று இவைகளுடன் வானுலகம் செல்'' என்றான். மான்களும், குட்டிகளும் தேவர்களின் உடல் பெற்றன. அந்த வேடனும் தேவனாகிவிட்டான். சத்தியம், தயை இவற்றின் பெருமையால் அவர்கள் விமானத்திலமர்ந்து தேவலோகம் சென்றனர்.

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று**

**- திருக்குறள்**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. தன் கையே தனக்குதவி

ஒரு குடியானவனிடத்தில் ஒரு பசுவும், ஒரு குதிரையும் இருந்தன. அவை இரண்டும் ஒன்றாகக் காட்டில் மேய்ந்தன. குடியானவனின் பக்கத்து வீட்டில் ஒரு சலவைத் தொழிலாளி இருந்தான். அவனிடத்தில் ஒரு கழுதையும், ஒரு ஆடும் இருந்தன. அவனும் அதே காட்டில் அவைகளை மேய விட்டிருந்தான். ஒன்றாக மேய்வதால் நான்கும் ஒன்றுக்கொன்று பிரியாமல் காட்டில் மேயச் சென்றன, அதே போல் காட்டிலிருந்து மாலை ஒன்றாகவே திரும்பி வந்தன.

அதே காட்டில் ஒரு முயல் வசித்து வந்தது. முயல் நான்கு மிருகங்களின் நட்பையும் பார்த்து யோசிக்கத் தொடங்கியது "எனக்கும் கூட இவர்களுடன் நட்பு ஏற்பட்டால் நன்றாயிருக்கும். இவ்வளவு பெரிய மிருகங்களின் நட்பு ஏற்படின், எந்த ஒரு நாயும் என்னைத் துன்புறுத்த முடியாது."

முயல் அந்நான்கிடத்தும் அடிக்கடி வரத் தொடங்கியது. அது அவைகள் முன்னால் குதிப்பதும், புரளுவதும் அவைகளுடனே மேய்வதுமாயிருந்தது. மெல்ல மெல்ல அவைகளோடு நட்புக்கொண்டது. இதனால் முயல் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. நாய்களைப் பற்றிய பயம் இப்போது போய் விட்டதென்று அது நினைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் ஒரு நாய் அக்காட்டில் வந்தது. முயல் பசுவின் பக்கம் வந்து ''பசுத்தாயே! இந்த நாய் கொடியது. இது என்னைக் கொல்ல வந்துள்ளது. இதை நீ உன் கொம்புகளால் கொன்றுவிடு'' என்றது.

''நீ குதிரையிடம் சொல்'' என்று கூறியது.

முயல் குதிரையிடம் ஓடிச் சென்று குதிரை ''அண்ணா! நான் உன் நண்பன். நாமிருவரும் இங்கு ஒன்றாகத்தான் மேய்கிறோம். இன்று இக்கொடிய நாய் என்னைத் துரத்துகிறது. நீ உன் முதுகில் என்னை ஏற்றிக் கொண்டு வெகுதூரம் சென்றுவிடு'' என்றது.

குதிரை ''நீ சொல்வது சரிதான். எனக்கு உட்கார முடியவில்லை. நான் நின்று கொண்டே தான் தூங்குகிறேன். நீ என் முதுகில் எப்படி ஏறுவாய்? இந்நாட்களில் என் குளம்பு நீண்டுவிட்டது. என்னால் வேகமாக ஓடவும் முடியவில்லை. காலைத் தூக்கவும் முடியவில்லை'' என்றது.

குதிரையின் பதிலால் நிராசையுள்ள முயல் கழுதையிடம் சென்றது. அது கழுதையிடம் கூறியது ''நண்பா! கழுதையே இந்தக் கெட்ட எண்ணமுள்ள நாயை உனது பின்னங்கால்களால் உதைத்தாயானால் என் உயிர் பிழைக்கும்.''

கழுதை, ''நான் தினமும் பசு, குதிரை இவைகளுடன் வீடு திரும்பிச் செல்கிறேன். அவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்க் கொண்டிருக்கின்றன. நான் அவைகளோடு போகாமல் பின் தங்கினால் என் எசமான் தடி எடுத்துக்கொண்டு ஓடி வருவான். மேலும் என்னை செம அடி அடித்து முதுகெலும்பை நொருக்கி விடுவான். என்னால் இங்கு தங்க முடியாது.''

கடைசியில் முயல் ஆட்டிடம் சென்றது. ஆடு அதைப் பார்த்ததுமே ``முயற்சகோதரா! தயவு செய்து இந்தப் பக்கம் வராதே. உனக்குப் பின்னால் நாய் ஓடி வந்து கொண்டிருக்கிறது. நான் அதனிடம் மிகவும் பயப்படுகிறேன்.''


எல்லாப் பக்கத்திலும் உதவியில்லாமல் வெறுப்புடன் முயல் அங்கிருந்து ஓடியது. ஓடி ஓடி அது ஒரு புதரில் ஒளிந்து கொண்டது. நாய் மிகவும் தேடியலைந்தது. ஆனால் அதற்கு முயலின் இருப்பிடம் தெரியவில்லை. நாய் திரும்பிச் சென்றதும் முயல் புதரிலிருந்து வெளியே வந்தது. அது நாற்புறமும் பார்த்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்டது. பிறரை நம்புவதால் எப்போதுமே ஏமாற்றமே கிடைக்கிறது. தனக்கு உதவி தானே தான் செய்து கொள்ள வேண்டும்.

**தன் கையே தனக்குதவி**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. தற்பெருமையின் பலன்

கடற்கரையோரமிருந்த ஒரு நகரத்தில் ஒரு பெருவணிகரின் புதல்வர்கள் காகம் ஒன்றை வளர்த்து வந்தனர். அவர்கள் உண்ட மிச்சத்தையும் காகம் உண்டு வந்தது. எச்சிலானாலும் சுவையும், சத்தும் அவ்வுணவில் அதிகமிருந்ததால் காகம் கொழுத்துவிட்டது. அதனால் அதற்குக் கர்வம் ஏறிவிட்டது. அது தன்னைவிட உயர்ந்த பறவைகளைக் கூட தகுதியற்றதாக நினைத்து அவைகளை அவமதித்தது.

ஒரு நாள் அக்கடற்கரையோரமாக எங்கிருந்தோ பறந்து வந்த சில அன்னங்கள் இறங்கின. வணிகரின் புதல்வர்கள் அந்த அன்னங்களைப் புகழ்ந்து கொண்டிருந்தனர். இதைக் காக்கையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அது அந்த அன்னங்களிடத்திற்கு சென்று, கம்பீரமாக தோற்றம் கொண்ட ஒரு அன்னத்திடம் ''நான் உங்களுடன் போட்டியிட்டு பறக்க விரும்புகிறேன்'' என்றது.

அன்னங்கள் அதற்கு அறிவுறுத்தின ''சகோதரா! நாங்களோ வெகு தூரம் வரை பறப்போம். எங்களுடைய இருப்பிடமாகிய மானசரோவர் இங்கிருந்து மிகத் தொலைவில் உள்ளது. உனக்கு என்ன பயன்? நீ அன்னங்களுடன் எப்படிப் பறக்க முடியும்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை கர்வத்துடன் ‘‘நான் பறப்பதில் நூறுவிதமான வழிகளை (விதங்களை) அறிவேன். ஒவ்வொரு வழியிலும் நூறு யோசனை தூரம் வரை என்னால் பறக்க முடியும்.’’ அநேக விதங்களில் பறந்து செல்லும் வழிகளின் பெயர்களைச் சொல்லிக் காகம் தற்பெருமையைப் பறைசாற்றியது. ‘‘சொல்லுங்கள்! இதில் நீங்கள் எந்த விதத்தில் பறக்க விரும்புகிறீர்கள்?’’

அப்போது உயர்ந்த மதிப்புடைய அன்னம் ‘‘காக்கையே! நீ தான் மிகவும் கெட்டிக்காரன். ஆனால் நானோ ஒரே விதத்தில்தான் பறக்க அறிவேன். அது எல்லாப் பறவைகளும் அறிந்த முறையே நான் அதில் தான் பறக்க முடியும்.’’

தலைக்கனம் கொண்ட காக்கைக்கு மேலும் கர்வம் அதிகரித்தது. ‘‘அது நல்லது! உனக்கு எப்படிப் பறக்கத் தெரியுமோ அப்படியே பற’’ என்று கூறியது.

அச்சமயம் அங்கு மேலும் சில பறவைகள் வந்தன. அவைகள் எதிரிலேயே காக்கையும், அன்னமும் பறந்தன. சமுத்திரத்திற்கு மேல் ஆகாயத்தில் காகம் பலவிதமாக தன் கலைத்திறனைக் காண்பித்து முழுப் பலத்துடன் பறந்தது. மேலும் அன்னமிருக்குமிடத்தை விட்டு சற்று முன்னால் கிளம்பிற்று. அன்னம் தன் இயற்கையான மெதுவான நடையில் பறந்து கொண்டிருந்தது. இதைப்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற காகங்கள் தங்களுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தத் தொடங்கின.

சிறிது நேரத்திலேயே காக்கை களைப்படையத் தொடங்கியது. அது இளைப்பாறுவதற்காக மரங்கள் நிறைந்த தீவுகளை இங்குமங்கும் தேடத் தொடங்கியது. ஆனால் அதற்கு அந்தக் கரைகாணாத கடலைத் தவிர எதுவுமே தென்படவில்லை. இதற்குள் அன்னம் பறந்து கொண்டே அதற்கு முன்னால் சென்றிருந்தது. காக்கையின் வேகம் குறைந்து விட்டது. அது மிகவும் களைத்துவிட்டது. மேலும் உயரக் கிளம்பும் அலைகளின் ஊடே பயங்கரமான ஜீவராசிகள் நிறைந்த கடலலைகளில் விழுந்து விடும் நிலைக்கு வந்து விட்டது.

அன்னம் காகம் மிகவும் பின்னால் தங்கிவிட்டதைப் பார்த்ததும் நின்றுவிட்டது. அது காக்கையின் அருகில் வந்து ''காக்கையே! உன் இறக்கையும், மூக்கும் அடிக்கடி நீரில் மூழ்குகிறதே. இது எப்படிப்பட்ட நடை?'' என்றது.

அன்னத்தின் கேலி நிறைந்த வார்த்தைகளைக் கேட்டுக் காகம் மிகத் துன்பத்துடன் ''அன்னமே! நாங்கள் காக்கை இனம் கா,கா என்று கத்த மட்டுமே தெரிந்தவர்கள். அப்படியிருக்க வெகு தூரம் பறப்பது என்பது என்னால் எப்படி முடியும்? என்னுடைய முட்டாள் தனத்திற்குரிய தண்டனை எனக்குக் கிடைத்துவிட்டது. தயவு செய்து இப்போது என்னுடைய உயிரைக் காப்பாற்று'' என்று கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரில் நனைந்து அசைவின்றிப் பாதி உயிர்போன நிலையிலிருந்த காக்கையிடத்தில் அன்னத்திற்கு இரக்கம் வந்துவிட்டது. இறக்கைகளினால் அதை எடுத்துத் தன் முதுகில் வைத்துக்கொண்டது. அதைச் சுமந்து கொண்டு பறந்து முதலில் பறக்கத் தொடங்கிய இடத்திற்கே வந்து, காகத்தை அதனுடைய இடத்தில் விட்டது. வீண்கர்வம் துன்பத்தையே அளிக்கும்.

**உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.**

**- பழமொழி**

* * * *
** ** ** **



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1913

GIFT OF
THE ASIA FOUNDATION
SAN FRANCISCO CA. U.S.A.
ආසියා පදනමේ ත්‍යාගයකි
ஆசியா மன்றத்தின் அன்பளிப்பு
NOT FOR SALE | විකිණීම සඳහා නොවේ | விற்பனைக்கல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு-11 தொ.பே: 011 2334004
Email: australuxme@yahoo.com, Web:www.astraluxumie.com

விலை: 185/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org